வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 14.07.2021 புதன்கிழமை | இதழ் : 223 | பக்கங்கள் : 16

## இராணுவ மயமாக்கல் மூலமாக ஜனநாயகம் ஆட்டம் கண்டுள்ளது!

### 96 கல்விமான்கள் கையொப்பமிட்டு அறிக்கை

கொழும்பு, ஜூலை 14,

"அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் எதேச்சாதிகாரமும் இராணுவ மயமாக்கலும் எமது ஜனநாயகத்தின் அடித்தளத்தை ஆட்டம் காணச் செய்துள்ளன." - இவ்வாறு தெரிவித்து இலங்கையின் பிரபலமான கல்விமான்கள், புத்தஜீவிகள் 96 பேர் கையொப்பமிட்டு நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

நீண்ட அந்த அறிக்கையின் முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு,

"பல தசாப்தகால பெரும்பான்மை அரசியல் மற்றும் அண்மைக் காலத்தில் இடம்பெற்று வரும் எதேச்சாதிகாரமும் இராணுவ மயமாக்கலும் எமது ஜனநாயகத்தின் அடித்தளத்தை ஆட்டம் காணச் செய்துள்ளன. இவை அனைத்தும் எமது அன்றாட வாழ்வில் இடம்பெறும் வன்முறைகளுக்கு எதிராக எம்மை மரத்துப்போக செய்துள்ளதுடன் எமது பிரஜைகளில் ஒரு பகுதியினர் இலக்கு வைக்கப்படும்போது கூட எம்மை மௌனம் காக்க வைத்துள்ளன. ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் அஹ்னப் ஜஸீம் ஆகிய 15

## மேலும் 41 பேர் மரணம் மொத்த உயிரிழப்பு 3,574

கொழும்பு, ஜூலை 14

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 41 மரணங்கள் பதிவாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் இடம்பெற்றுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்த்தன நேற்று உறுதிப்படுத்தியுள்ளார்.

மரணித்தோரில் 18 பெண்களும், 23 ஆண்களும் அடங்குகின்றனர். இவர்களில் 28 பேர் 60 வயதுக்கும் மேற்பட்டவர்களாவர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 574 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

## 248 கடற்படையினருக்கு மன்னாரில் கொரோனா!

யாழ்ப்பாணம், ஜூலை 14

மன்னாரில் 248 கடற்படையினருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரியவந்தது.

யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நேற்று 291 மன்னார் கடற்படையை சேர்ந்தவர்களின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதிலேயே 248 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்கள் அனைவரும் 18 தொடக்கம் 24 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது. இதனால், இவர்கள் பயிற்சி நிலை கடற்படையினராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ஐ)

## 1,404 பேருக்கு நேற்று கொரோனா தொற்று!

கொழும்பு, ஜூலை 14

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,404 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 77 ஆயிரத்து 510 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,328 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண் ணிக்கை 2 இலட்சத்து 47 ஆயிரத்து 15

## இலங்கைக்கு 14 .5 இலட்சம் அஸ்ட்ரா செனகா தடுப்பூசி!

### ஜப்பான் நாடு வழங்குகின்றது

கொழும்பு, ஜூலை 14

கோவக்ஸ் தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 14 இலட்சத்து 50 ஆயிரம் அஸ்ட்ரா செனகா தடுப்பூசிகளை வழங்க ஜப்பான் தீர்மானித்துள்ளது. ஜப்பானில் தயாரிக்கப்பட்ட இந்த தடுப்பூசிகள் வரும் வாரமளவில் நாட்டை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமையவும், இயலுமானவரை மக்களுக்கு தடுப்பூசிகளை பெற்றுக் கொடுத்தல் என்ற ஜப்பானின் கொள்கைக்கு அமைவாகவுமே இந்தத் தடுப்பூசிகள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன என்று ஜப்பான் தூதரகம் விடுத்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், "லாஸ்ட் மைல் சப்போர்ட்" என்ற செயல்திட்டத்தின்கீழ், 15

## வடக்கில் நேற்று 22 தொற்றாளர்!

யாழ்ப்பாணம்,ஜூலை 14

வடக்கு மாகாணத்தில் நேற்றைய தினம் 22 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வு கூடத்தின் பரிசோதனை அறிக்கையிலேயே இந்த விடயம் வெளியானது.

இதன்படி, நேற்று யாழ்ப்பாணத்தில் 15

## ஆழமான பொருளாதார, சமூக பிரச்னைக்குள் இலங்கை

### எச்சரிக்கை விடுக்கிறார் கரு ஜயசூரிய

கொழும்பு, ஜூலை 14,

இலங்கை ஆழமான பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் பிரச்னைக்குள் தள்ளப்படுவதாக எச்சரித்துள்ள முன்னாள் சபாநாயகர் கரு ஜனசூரிய, அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இந்த நேரத்தில் இணைந்து செயற்பட வேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளார்.

"இந்தப் பிரச்னையைத் தீர்த்துவைப்பதற்கு தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொதுவான ஒரு திட்டத்தின் கீழ் செயற்பட வேண்டும். நாட்டை முன்னிலைப்படுத்தி நாம் செயற்பட்டால், அரசும் எதிரணியும் 15

## தொழிற்சங்கத் தலைவர்கள் கைதானது ஜனநாயகத்துக்குப் பெரும் அச்சுறுத்தல்

### இராதாகிருஷ்ணன் எம்.பி. சுட்டிக்காட்டு

ஹட்டன், ஜூலை 14.

"தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடும் தலைவர்களை கைது செய்து, அவர்களைப் பலவந்தமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியமையானது ஜனநாயகத்தை ஒடுக்கும் செயலுக்கு ஒப்பானதாகும்."

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டினார்.

ஹட்டனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலவசக் கல்வியைக் பாதுகாப்பதற்காக ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 15

## ஜனாதிபதி பதவிக்கும் பஸில் தகுதியானவரே

### 'மொட்டு'வின் செயலர் சாகர அதிரடி

கொழும்பு, ஜூலை 14

"நாட்டின் ஜனாதிபதிப் பதவிக்கும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தகுதியானவர்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எரிபொருள் விலை அதிகரிப்பு விடயத்தில் அமைச்சர் உதய கம்மன்பில மீது நாம் முன்வைத்த குற்றச்சாட்டு உண்மையே. அதில் எந்த மாற்றமும் இல்லை.

ஆனாலும், அரசுக்குள் உள்ள கருத்து முரண்பாடுகளில் எதிர்க்கட்சியைப் பலப்படுத்த வேண்டிய அவசியம் எமக்கில்லை.

நிதி அமைச்சர் பஸில் ராஜ பக்ஷ விரைவில் 15

# மீசாலை வாள்வெட்டில் வர்த்தகர் படுகாயம்!

தென்மராட்சி, ஜுலை 13

தென்மராட்சி - மீசாலையில் நேற்று இரவு இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறையில் வர்த்தகர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

மீசாலைக்கும் சாவகச்சேரிக்கும் இடைப்பட்ட ஐயா கடையடிப் பகுதியில் நேற்று இரவு 8 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் அந்தப் பகுதியில் அழகுசாதன வர்த்த நிலையம் நடத்தும் 35 வயது வர்த்தகர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ)

## இப்படியும் நடக்கிறது...!

ஓர் இளைஞன் பொலிஸ் வேலைக்கான நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டான். அவனிடம் பல்வேறு கேள்விகளைக் கேட்ட அதிகாரிகள், கடைசியாக "காந்தியைச் சுட்டுக் கொன்றது யார்?" என்று கேட்டனர்.

அவன் எதுவும் கூறாமல் யோசித்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் அமைதியாக இருந்த அவனைப் பார்த்து "நீங்கள் போகலாம்", என்றனர்.

வெளியே வந்து அவனைப் பார்த்த நண்பன் ஒருவன், "என்ன வேலை கிடைக்கும்போல தெரிகிறதா?" என்று கேட்டான்.

அதற்கு அவன் "நானும் கிடைக்கும் என்றுதான் நினைக்கிறேன். ஒரு கொலை வழக்கில் குற்றவாளியைக் கண்டுபிடிப்பது பற்றி என்னிடம் பேசினார்கள்", என்றான்.

வட மாகாணத்தில் காலியாகும் பதவி ஒன்றுக்காக பலரும் அடித்துக் கொள்கின்றனர். ஒவ்வோர் அரசியல் தலைவர்களும் தத்தமக்கு வேண்டியவர்களை அந்தப் பதவியில் அமர்த்தி விடவேண்டும் என்று முயன்றுகொண்டிருக்கின்றனர் என்று தகவல்கள் வருகின்றன.

இந்த நிலையில் திடீரென்று ஒரு செய்தி சில இணையத்தளங்களில் வெளியாகியிருந்தது.

ஓர் அதிகாரி அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறாரென அந்தச் செய்தி கூறியது. அவர் அந்தப் பதவிக்கு பொருத்தமானவரா இல்லையா என்பதல்ல இங்கே பிரச்னை. அவர் பொருத்தமானவராகவே இருக்கலாம். ஆனால், அதனை தெரிவுசெய்யவேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பு.

அந்தச் செய்தி வெளிவந்தவுடன் ஓர் அதிகாரி இந்த ஊர்க்குருவியுடன் பேசினார். அந்தச் செய்தி உண்மையா என்பதை அறியவேண்டும் என்பது அவரது விருப்பம். அவருக்கு வேறு எந்த எண்ணமும் இருந்ததாகவும் தெரியவில்லை.

"அவர் தெரிவுசெய்யப்பட்டாரா என்பது தெரியவில்லை. ஆனால், அந்தச் செய்தி மட்டும் நிச்சயமாக சரியானதாக இருக்கமுடியாது", என்றேன்.

"எப்படி இவ்வளவு திடமாகச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார் அந்த அதிகாரி.

"அந்தச் செய்தியில் 'வியத்மக' அமைப்பும் சம்பந்தப்படுத்தப்பட்டிருந்தது. அதிலிருந்து அது தவறான செய்தி என்பதை தெரிந்துகொள்ள முடியாதா", என்றேன் நான்.

அந்தப் பதவிக்கு பொருத்தமானவர்களை தெரிவுசெய்ய 'வியத்மக' ஆராய்ந்ததாகவும், குறிப்பிட்ட அந்த அதிகாரிக்கு 95 புள்ளிகள் கிடைத்ததாகவும், மற்றையவர்கள் எல்லோருடைய புள்ளிகளையும் சேர்த்தாலும் 95 வராத அளவுக்கே மற்றையவர்களின் புள்ளிகள் இருந்தன வெனவும் அந்தச் செய்தி தெரிவித்திருந்தது.

'வியத்மக' என்பது ஓர் அரசாங்க நிறுவனம் அல்ல. அது புத்திஜீவிகளை உள்ளடக்கிய ஒரு பொது நிறுவனம். அந்த நிறுவனம் அரச அதிகாரி நியமனத்தில் தனது செல்வாக்கைச் செலுத்தலாம். ஆனால், எந்த அதிகாரி பொருத்தமானவர் என்பதை மார்க்ஸ்போட்டு பார்க்கும் அளவுக்கு அரச நிர்வாகத்தில் தலையிட்டதாக இதுவரை யாரும் அறியவில்லை.

இந்தச் செய்தியை யார் முதலில் தயாரித்தார்களோ தெரியவில்லை. தயாரித்தவர்கள் இருக்கட்டும், ஆனால், அதனை வெளியிட்டவர்களை நினைக்கின்றபோது மேலே சொன்ன பொலிஸ் வேலை நேர்முகத்தேர்வுக்கு சென்று வந்த இளைஞர்தான் ஞாபகத்தில் வந்துசென்றார்.

- ஊர்க்குருவி

## பருத்தித்துறை - கொழும்பு பஸ் சேவை இன்று ஆரம்பம்!

வடமராட்சி, ஜுலை 14

அத்தியாவசிய பணிகளுக்காக மாகாணத்துக்கு வெளியே பயணிப்போரின் வசதி கருதி, பருத்தித்துறை - கொழும்பு பகல் பஸ் சேவை இன்று14 ஆம் தகதி புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்படுகின்றது என்று பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ முகாமையாளர் தெரிவித்தார்.

தினமும் காலை 5.15 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்கும், காலை 8.15 மணிக்கு கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கும் பஸ் சேவைகள் இடம்பெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ - 2)

## பரீட்சை ஒத்திவைப்பு அடுத்தவாரமே முடிவு



கொழும்பு, ஜுலை 14

ஒக்ரோபர் மாதத்தில் நடத்தத் திட்டமிடப்பட்ட 2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை ஒத்திவைப்பது குறித்த முடிவு அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒன்பது மாகாணங்களின் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் அனைத்து தரப்பினருடனும் விரிவான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து ஒரு முடிவு எட்டப்படும்.

நாட்டின் கோவிட்-19 நிலைமையைக் கருத்தில் கொண்டு குறுகிய காலத்திற்குள் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட வேண்டுமா என்பது குறித்து கலந்துரையாடல்களில் கவனம் செலுத்தப்படும்.

விரிவான கலந்துரையாடலைத் தொடர்ந்து அடுத்த வாரம் ஒரு முடிவு அறிவிக்கப்படும் - என்றார். (ஐ)

## அ.அமிர்தலிங்கம்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வித பதவிகளுக்கும் தம்மை முதன்மைப்படுத்தாது ஒரு சாதாரண உறுப்பினராக இருந்து புதிய வடக்கு - கிழக்கு மாகாண சபையை ஆரோக்கிய மாக இயக்குவதற்கு பெருந்தன்மை யோடு இணங்கியிருந்தார்.

இருந்தபோதிலும் தமிழ் அரசியலில் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக பிரகாசித்த அ.அமிர்தலிங்கத்தின் மறைவு இன்றுவரை எவ்விதத்திலும் ஈடுசெய்யப்பட முடியாததொன்றாகவே இருக்கின்றது.

### கல்வி TV CHANNEL-1 — 14.07.2021 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மாதிரி வினாத்தாள் மறுஒளிபரப்பு-LIVE கணிதம் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி TV CHANNEL - 2 — 14.07.2021 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu ஈழநாடு
14.07.2021 புதன்கிழமை
பிலவ வருடம், ஆனி 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# எதிர்க்கட்சிகளின் பலம்?

அரசாங்கம் உள்ளுக்குள் முரண்படுவதாக தெரிந்தாலும்கூட, அதனை சமாளித்துக் கொண்டு முன்நோக்கி பயணிப்பதற்கான முயற்சி களை மேற்கொண்டு வருகின்றது. அண்மையில் மீளவும் அரசாங்கத்தின் முக்கிய பொறுப்புக்களை ஏற்றிருக்கின்ற பஸில் ராஜபக்ஷ, தங்களை எவராலும் வீழ்த்த முடியாது என்று சூளுரைத்திருக்கின்றார்.

ஒரு கட்சியின் முன்னணி உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் உற்சாக நிலையில் வைத்திருப்பதற்கு, இது போன்ற உறுதியான அறிவிப்புக்கள் தேவைப்படலாம். ஒரு கட்சியின் ஆதரவாளர்கள் விரக்தி அடைந்தால் கட்சி பலமிழந்துவிடும், எனவேதான் கட்சியின் ஆதரவாளர்களை உற்சாக நிலையில் வைத்துக் கொள்வதில் ஒவ்வொரு கட்சியும் கூடுதல் அக்கறை எடுத்துக் கொள்வதுண்டு. இந்த அடிப்படையில் பஸில் ராஜபக்ஷவும் இவ்வாறானதோர் அறிவிப்பை வெளியிட்டிருக்கின் றார்.

பஸில் ராஜபக்ஷ மீளவும் அரசியல் காய் நகர்தல்களில் ஈடுபட்டு வரும் வேளையில்தான், பிறிதொருபுறம் ஐக்கிய தேசியக் கட்சியை அடிமட்டத்திலிருந்து கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளாரென ரணில் விக்கிரமசிங்கவும் அறிவித்திருக்கின்றார். இதே வேளை, ராஜபக்ஷக்களுடன் மோதுவதற்கு அனைவரையும் ஓரணியில் திரளுமாறும் ரணில் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

ரணிலின் அழைப்பு ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்துகின்றது. அதா வது எதிரணியினர் பலவீனமாக இருக்கின்றனர் என்பது வெள்ளிடை மலை. ஒருங்கிணைந்த வேலைத்திட்டமும் தந்திரோபாயமும் இல்லாவிட்டால் ராஜபக்ஷக்களை சிங்கள மக்கள் மத்தியிலிருந்து அகற்ற முடியாது. 2015இலும் இது போன்றதொரு கூட்டு எதிரணி தந்திரோ பாயத்தின் அடிப்படையில்தான் மஹிந்த ராஜபக்ஷ வீழ்த்தப்பட்டார். ஆனாலும் அந்த வெற்றியை மேலும் முன்கொண்டு செல்ல ரணில் விக்கிரமசிங்கவினால் முடியவில்லை. மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதில் தந்திரோபாயமாக செயல்பட்டவர்களால், ஆட்சியை தக்க வைப்பதில் தந்திரோபாயமாக செயல்பட முடியாமல் போனது. இறுதியில் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத கதையாக நல்லாட்சிக் கனவு முளையிலேயே கருகிப் போனது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், மீளவும் ராஜபக்ஷக்களுடன் மோதுவது என்னும் ஓர் இலக்கை அடிப்படையாகக் கொண்டு மட்டும் செயல்படுவது புத்திசாதுர்யமான ஒன்றா? அரசாங்கத்தை எவ்வாறு முன் னெடுத்துச் செல்வது என்பதில் நீண்ட கால நோக்கம் கருதிய தந்திரோ பாயங்கள் இல்லாது, வெறுமனே ராஜபக்ஷக்ளை மட்டும் இலக்கு வைத்து செயல்படுவது எந்தவொரு நல்ல விளைவுகளையும் ஏற்படுத்தப் போவதில்லை. ஏனெனில், ஓர் ஆட்சியில் கொண்டுவரப்படும் விடயங் களை, பிறிதோர் ஆட்சியில் பெரும்பான்மை மூலம் மாற்றியமைக்க முடியுமென்றால் ஆட்சி மாற்றங்களின் பெறுமதி என்ன?

முக்கியமாக தமிழ் மக்களின் தலைமைகள் என்போர் இந்த நிலை மைகளை துல்லியமாக மதிப்பீடு செய்ய வேண்டும். தமிழ் மக்களின் நலனை முன்னிலைப்படுத்தி தந்திரோபயமான அணுகுமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் முன், வட, கிழக்கை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில் கூட்டு வேலைத்திட்டம் ஒன்று தேவை. இல்லாவிட்டால் தமிழ் மக்களின் அரசி யல் கோரிக்கைகளை, ஒரு தரப்பாக முன்வைக்க முடியாது போகும்.

# அ. அமிர்தலிங்கம் 32ஆவது நினைவேந்தல்!



**- அலசுவது இராஜதந்திரி -**

*இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு ஒரு பேரிடியைக் கொடுத்த சம்பவமாகவே 32 வருடங்களுக்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூடட்டணி செயலதிபர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் அவரோடிருந்த வெற்றிவேலு யோகேஸ்வரன் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் விளங்கியிருந்தது.*

*இந்த சூட்டுச் சம்பவத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவரும் சுடப்பட்டார். ஆனால், அவர் மயிரிழையில் சூட்டுக்காயங்களுடன் உயிர் தப்பியிருந்தார். தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபர் அ. அமிர்தலிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை ஓர் உயர்வான தமிழர் அரசியல் அத்தியாயத்தின் முடிவு என்று குறிப்பிடுவதைவிட, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பல தசாப்த காலமாக விளஙகிய ஜனநாயக விழுமியங்கள் முற்றுமுழுதாக ஒரு முடிவுக்கு வந்து ஓர் ஏதேச்சாதிகாரமான ஆயுத கலாசாரம் விரிவு பெற்ற தினமே அ. அமிர்தலிங்கம் கொலையுண்ட தினம் எனக் குறிப்பிடலாம்.*

*அ. அமிர்தலிங்கம் கொலை செய்யப்படுவதற்கு முன்பதாகவே ஆயுத கலாசாரம் வடக்கு - கிழக்கில் பலதரப்பட்ட கொலைச் சம்பவங்களுடன் முனைப்பேறியிருந்தது. ஆயுதப் போராட்டங்களில் குதித்தவர்களிடையே ஒற்றுமையின்மை மற்றும் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருந்த நிலையில் யாரையும் எவரும் எதுவும் செய்யலாம் என்ற தன்மையே வடக்கு - கிழக்கில் வியாபித்திருந்தது.*

*எழுபதுகளின் நடுப்பகுதியில் படிப்படியாக ஆரம்பித்து பின்னர் எண்பதுகளில் மூர்க்கமடைய ஆரம்பித்த ஆயுதக் கலாசாரம் வடக்கு - கிழக்கின் ஜனநாயக விழுமியங்களையே ஆட்டங்காண வைத்திருந்தது.*

*அ. அமிர்தலிங்கத்தின் புதல்வாரன மருத்துவர் அ.பகீரதன் நேற்றைய தினம் தமது தந்தையாரது 32ஆவது தினத்தையொட்டி வெளியிட்டுள்ள பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளதாவது: “தமது தந்தையாரின் அறுபது வருட உலக வாழ்க்கையும், நாற்பது வருட அரசியல் வாழ்க்கையும் முடிவுக்கு வந்த தினமே அவர் அகால மரணத்தை தழுவிய தினமாகும் (1989 ஜ/லை 13ஆம் திகதி). ஓர் அரசியல் தலைவனாகவும், குடும்ப தலைவனாகவும் , வழக்கறிஞராகவும், ஒரு சிறந்த தந்தையாகவும் தனது கடமையை நன்கு நிறைவேற்றி எம்மை விட்டு பிரிந்துள்ளார்.“*

**தந்தை செல்வாவின் தளபதி**

*தந்தை செல்வாவின் அரசியல் பாசறையில் ஒரு தளபதியாக விளங்கியதோடு அரசியல் விடயங்களிலே மிக உறுதிப்பாட்டுடன் தமது பங்களிப்பை அ. அமிர்தலிங்கம் வழங்கியிருந்தார். இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் வடக்கு - கிழக்கில் தமிழ் அரசுக் கட்சியில் பல தமிழ் அரசியலாளர்கள் தந்தை செல்வாவின் தலைமைத்துவத்துக்கு ஆரோக்கியமான பங்களிப்பை வழங்கியிருந்தனர்.*

*1977ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றி பெற்றதையடுத்து பாராளுமன்றில் முதலாவது தமிழ் எதிர்கட்சித் தலைவராக அ. அமிர்தலிங்கம் தெரிவானார். இதன்பின்னரே தென்னிலங்கையில் மாத்திரமல்ல. வடக்கு - கிழக்கு அரசியலில்கூட மிகவும் சவால் நிறைந்த தருணங்களை அமிர்தலிங்கம் எதிர்கொண்டிருந்தார். இருந்தபோதிலும் தாம் சந்தித்த சவால்களை மிக உறுதியோடு அவர் சந்தித்திருந்தார். எது நேரிடினும் “தம் கடன் பணி செய்துகிடப்பதே“ என்ற உறுதிப் பாட்டுடன் தனது அரசியலில் துணிச்சலோடு ஈடுபட்டிருந்தார்.*

*ஒரு தடவை தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரன். அ. அமிர்தலிங்கத்துக்கு தாம் மரண தண்டனையை வழங்கப் போவதாகக் கூறியிருந்தார். அப்போது தமது மரணத்தை பிரபாகரனால் நிச்சயப்படுத்த முடியாது என அமிர்தலிங்கம் பதிலளித்திருந்தார்.*

*1989ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கொழும்பில் அன்றைய ஜனாதிபதியாக இருந்த காலஞ்சென்ற ரணசிங்க பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்தில் தமிமீழ விடுதலைப் புலிகள் வன்னிக் காட்டிலிருந்து கொழும்பு வந்து அரசியல் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த சமயத்திலேயே கொழும்பில் அப்போது தங்கியிருந்த அ. அமிர்தலிங்கம், வெ. யோகேஸ்வரன், மு. சிவசிதம்பரம் ஆகியோர் தமிழீழ விடுதலைப் புலிகளால் இலக்கு வைக்கப்பட்டிருந்தனர்.*

**மங்கையர்கரசி கூறியவை**

*சில வருடங்களுக்கு முன்னர் அ. அமிர்தலிங்கத்தின் பாரியார் திருமதி மங்கையர்கரசி அமிர்தலிங்கம் குறிப்பிடுகையில், “தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வே. பிரபாகரன் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தபோது தாம் அவரை ஒரு பிள்ளைபோல கருதி அவருக்கு உணவளித்து உதவிகள் புரிந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.*

*எனவே, “வளர்த்த கடா மார்பில் பாய்ந்த” கதையாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வே.பிரபாகரனினால் அ. அமிர்தலிங்கம் சுடப்பட்ட சம்பவம் விளங்கியிருந்தது.*

*இலங்கை - இந்திய ஒப்பந்தம் தயாரான வேளையில் இந்திய பிரதம மந்திரி ராஜீவ் காந்திக்கு வடக்கு - கிழக்கு பிரச்னை பற்றிய தெளிவான பார்வையை வழங்கும் விதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரத்துடன் திருச்சிராப்பள்ளியிலிருந்து புதுடில்லி வரை விசேட விமானத்தில் பயணித்தவாறே ராஜீவ் காந்தியுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.*

*இதன்பின்னர் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபை உருவானபோது தமது உயர்வான அரசியல் அனுபவங்களையும் பொருட்படுத்தாது முதலமைச்சரோ அல்லது வேறு*

*(02ஆம் பக்கம் பார்க்க)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜூலை - 14 புதன்கிழமை
பிலவ வருடம் - ஆனி 30
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : பஞ்சமி




**மேடம்**
தவறுகளைத் திருத்திக் கொள்ள முயற்சி செய்வீர்கள். பெருமை கொள்ளத்தக்க நாள். வீட்டை அழகுபடுத்துவீர்கள். பொதுப் பணிகளில் ஈடுபடுவீர்கள். பழைய கவலை ஒன்று தீரும்.

**இடபம்**
சக பணியாளர்களின் தேவையறிந்து உதவி செய்வீர்கள். வீட்டை மேம்படுத்துவீர்கள். மூத்தோர்களின் அன்பும் ஆசியும் கிடைக்கும். உங்களின் நீண்ட கால முயற்சி வெற்றி பெறும்.

**மிதுனம்**
கடந்த கால வெற்றிகளை நினைத்து மகிழ வாய்ப்பு வரும். உடன்பிறந்தவர்கள் பற்றி இருந்த மனக்கவலை நீங்கும். கடந்த காலத்தில் வெறுத்த ஒருவர் விரும்பி வந்து வியப்பளிப்பார்.

**கடகம்**
அனுபவசாலி ஒருவர் தக்க தருணத்தில் அறிவுரை தருவார். உடல் நலத்தைப் பேணுவது நல்லது. நீண்ட கால ஆசை நிறைவேறும். முக்கிய விஷயங்களைச் சிலகாலத்துக்குத் தள்ளிப்போடுவது நல்லது.

**சிம்மம்**
கைமாற்று கொடுத்த பணம் திரும்பி வரும். மற்றவரிடையே மதிப்பு உயரும். புண்ணியச் செயல்களில் நாட்டம் செல்லும். பணி மாற்றம் பற்றி யோசிப்பீர்கள். நல்ல திருப்பம் ஏற்பட்டு மகிழ்வீர்கள்.

**கன்னி**
வீண்பயம் நீங்கும். நண்பரின் ஆதரவால் முன்னேற்றம் காண்பீர்கள். அவசரமோ பதற்றமோ இல்லாமல் பணிகளைச் செய்வது நல்லது. வேகமும் விவேகமும் ஒருசேர இருப்பதால் வெற்றி.

**துலாம்**
பயணத்தால் பலன் கிடைக்கும். பணத்தேவை நிறைவேறும். உங்களைவிட இளையவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். வெளியூரில் உள்ள உறவினர்களைச் சந்திக்கச் செல்வீர்கள்.

**விருட்சிகம்**
உடன் படித்த நண்பர்களுடன் பொழுதுபோக்கில் ஈடுபடுவீர்கள். பகைமை கொண்டிருந்த உறவினர்கள் அனுசரித்துப் போவார்கள். கடந்த காலத்தில் செய்த செயல்களால் நன்மை கிடைக்கப் பெறுவீர்கள்.

**தனுசு**
ஆன்மிக சிந்தனை மேலோங்கும். பிள்ளைகளால் உதவி கிடைக்கும். சகோதர வழியில் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். உங்களுக் கான பொறுப்பை மற்றவரை நம்பி ஒப்படைக்க வேண்டாம்.

**மகரம்**
தாமதம் ஏற்படும் நாள். லாபம் எதிர்பார்த்ததை விட குறையும். குடும்பச் செலவு அதிகரிக்கும். பெண்கள் பாராட்டுப் பெறுவர். கடந்த நாட்களில் இருந்த சிரமம் மறையும். சகோதரவழியில் உதவி உண்டு.

**கும்பம்**
குடும்பத்தாரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். சமூக அந்தஸ்து உயரும். பழைய பிரச்னை ஒன்றிற்குத் தீர்வு கிடைத்து நிம்மதி காண்பீர்கள். வாக்கு வன்மையால் செயல்கள் நல்லபடியாக முடியும்.

**மீனம்**
முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகிச் செல்வர். முயற்சி வெற்றி பெறும். பணியிடத்தில் ஏற்பட்ட குழப்பத்திற்கு நல்ல தீர்வு காண்பீர்கள். பணவரவு கூடும். போட்டி அகலும். குழந்தைகளால் மகிழ்ச்சி.

# ஒரு கோடி தடுப்பூசி தமிழகத்துக்கு தேவை சிறப்பு ஒதுக்கீடாக அனுப்பிவையுங்கள்

## பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம்





சென்னை, ஜூலை 14

தமிழகத்துக்கு ஒரு கோடி தடுப்பூசிகளைச் சிறப்பு ஒதுக்கீடாக வழங்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் நேற்று பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கொரோனா மூன்றாம் அலை வருமென மருத்துவ வல்லுநர்கள் எச்சரித்து வருகின்றனர். அதேசமயத்தில் மூன்றாம் அலையிலிருந்து தற்காத்துக் கொள்ளத் தகுதியுள்ள அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்துகின்றனர்.

ஆனால், தமிழகத்தில் தடுப்பூசி தட்டுப்பாடு நிலவுகிறது. சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் ஒரு சில தினங்களாகத் தடுப்பூசி முகாம்கள் இரத்து செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தமிழகத்துக்கு ஒரு கோடி தடுப்பூசிகளைச் சிறப்பு ஒதுக்கீடாக வழங்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

கொரோனா தடுப்பூசிகள் தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் மத்திய சுகாதாரத் துறை தாக்கல் செய்த பிரமாணப்பத்திரத்தில், 18-44 வயதுடையவர்களுக்காக, அனைத்து மாநிலங்களுக்கும் சமமாகத் தடுப்பூசிகள் பிரித்து ஒதுக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தமிழகத்துக்கு போதுமான தடுப்பூசிகள் ஒதுக்கப் படுவதில்லை.

உதாரணமாக, தமிழகத்தில் தடுப்பூசி செலுத்திக் கொள்ளத் தகுதியான ஆயிரத்தில் 302 பேருக்குக் கிடைக்கும் அளவுக்கு மிக குறைவாக தான் ஒதுக்கப்படுகிறது. ஆனால் குஜராத், கர்நாடகா, ராஜஸ்தான் மாநிலங்களைப் பொறுத்தவரை முறையே, 533, 493, 446 என்ற அளவில் வழங்கப்படுகிறது. எனவே, தமிழகத்தில் தடுப்பூசி தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், ஒரு கோடி தடுப்பூசிகளை சிறப்பு ஒதுக்கீடாக அளித்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் முதல்வர் ஸ்டாலின்.

# அணை கட்டும் பணி வெகுவிரைவில் தமிழகம் பற்றி பேச விரும்பவில்லை

## கர்நாடக முதல்வர் எடியூரப்பா அறிவிப்பு



பெங்களூரு, ஜூலை 14

“சர்ச்சைக்குரிய மேகதாது அணை கட்டும் பணி வெகு விரைவில் தொடங்கப்படும், தமிழகம் பற்றி எதுவும் பேச விரும்பவில்லை” என கர்நாடக முதல்வர் எடியூரப்பா நேற்று கூறியுள்ளார்.

மேகதாது அணை அமைக்க தமிழக அரசு எதிர்ப்பு தெரிவிக்கக் கூடாது எனக் கோரி கர்நாடக முதல்வர் எடியூரப்பா தமிழக முதல்வருக்குக் கடிதம் எழுதினார். தமிழக முதல்வர் ஸ்டாலின் கர்நாடக முதல்வருக்கு பதில் கடிதம் எழுதினார்.

இந்தநிலையில் மத்திய ஜல் சக்தித்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் நேற்று பெங்களூர் வந்தார். கர்நாடக மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் குடிநீர் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் கர்நாடக முதல்வர் எடியூரப்பா பங்கேற்றார். கர்நாடக உள்துறை அமைச்சர் பசவராஜ் பொம்மை, நீர்வளத் துறை அமைச்சர் மாதுசாமி ஆகியோரும் பங்கேற்றனர். அப்போது மேகதாது அணை திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டும் என கர்நாடகா சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

இதுகுறித்து கஜேந்திர சிங் ஷெகாவத் கூறுகையில் “மேகதாது உட்பட கர்நாடகாவின் கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்படும். அதே சமயம் சட்டப்படி மத்திய அரசு முடிவெடுக்கும்” எனக் கூறினார்.

பின்னர் எடியூரப்பா கூறியதாவது, மேகதாது அணை கட்டும் பணி விரைவில் தொடங்கப்படும். மத்திய அரசிடம் அனைத்து கோரிக்கைகளையும் மனுவாக கொடுத்துள்ளோம். மத்திய அரசு உரிய அனுமதியை வழங்கும் என எதிர்பார்க்கிறோம். தமிழகம் குறித்தும் நான் பேச விரும்பவில்லை” என்றார்

# விஜய்க்கு ரூ. ஒரு இலட்சம் அபராதம்



சென்னை, ஜூலை 14

வெளிநாட்டு சொகுசு காருக்கு வரி விதிக்க தடை கோரிய நடிகர் விஜய்க்கு ரூ. ஒரு இலட்சம் அபராதம் விதித்து சென்னை உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டு உள்ளது.

2018 ஆம் ஆண்டு நடிகர் விஜய் இங்கிலாந்தில் இருந்து ரோல்ஸ் ராய்ஸ் கார் ஒன்றை இறக்குமதி செய்தார். இந்த காருக்கு நுழைவு வரி விதிக்க தடை கோரி நடிகர் விஜய் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதி எஸ்.எம்.சுப்ரமணியம் முன் விசாரணைக்கு வந்தது. இந்த மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மேலும் நடிகர் விஜய்க்கு ரூ. 1 லட்சம் அபராதம் விதித்த உயர் கோர்ட் அபராத தொகையை முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு வழங்க உத்தர விட்டது.

“நடிகர்கள் உண்மையான ஹீரோக்களாக இருக்க வேண்டும். ரீல் ஹீரோக்களாக இருக்க கூடாது. வரி என்பது நன்கொடையல்ல நாட்டிற்கு குடிமகன்கள் செய்ய வேண்டிய கட்டாய பங்களிப்பு. சமூக நீதிக்கு பாடுபடுவதாக பிரதிபலிக்கும் நடிகர்கள் வரி ஏய்ப்பு செய்வது ஏற்றுக்கொள்ள முடியாது” என உயர் நீதிமன்றம் கண்டனம் தெரிவித்து உள்ளது.

# அரசாங்கம் நாட்டுமக்களை ஏமாற்ற நினைக்கக்கூடாது!

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 14**

**ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் மந்த கதியில் இடம்பெறுவதாகவும், அரசாங்கம் இவ்வாறான செயல்பாடுகளை மேற்கொண்டு மக்களை ஏமாற்ற நினைக்கக்கூடாது என்றும் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

கொழும்பு, ஆயர் இல்லத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான தற்போதைய நிலவரம் மற்றும் விசாரணைகள் தொடர்பாக நாம் ஜனாதிபதிக்கு எழுத்து மூலமான ஆவணமொன்றை அனுப்பியுள்ளோம்.

அனைத்து விடயங்களையும் ஆராய்ந்தே இந்த ஆவணத்தை தயார் செய்துள்ளோம். எம்மைப் பொறுத்தவரை இது தொடர்பான விசாரணைகளில் இன்னமும் வேகம் தேவைப்படுகிறது.

நாம் அனைத்துக் கட்சிகளிடமும் இது தொடர்பாக கூறியுள்ளோம். எமது கவலைகளைக் குறிப்பிட்டுள்ளோம்.

அரசாங்கம் இந்த விசாரணைகளை தீவிரப்படுத்த வேண்டும். ஓரிருவரை கைது செய்து, நீதிமன்றுக்கு அழைத்துவந்து, இந்த விசாரணைகள் முடிவுற்றதாகக் கூறவேண்டாம்.

இவ்வாறான செயல்பாடுகளை மேற்கொண்டு மக்களை திருப்திப்படுத்த முடியாது.

அப்படி அரசாங்கமோ அல்லது விசாரணைகளை முன்னெடுக்கும் திணைக்களங்களோ நினைத்தால், அது தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் செயல்பாடாகும்.

நாம் இந்த விடயத்தை அவ்வளவு எளிதாக கைவிடப் போவதில்லை-என்றார். (அ)



# வலி.மேற்கு பிரதேச சபை முன்பாக அமிர்தலிங்கத்தின் நினைவுதினம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

மறைந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் முதுபெரும் தமிழ் அரசியல் தலைவருமான அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 32ஆவது நினைவு தினம் நேற்று வலிகாமம் மேற்கு பிரதேசசபை முன்றலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், தமிழ் அரசுக் கட்சியின் பொருளாளர் பொ.கனகசபாபதி, வலி.மேற்கு பிரதேசசபை தவிசாளர் நடனேந்திரன், சே.கலையமுதன், கௌரி காந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வவுனியா பல்கலையின் முதலாவது துணைவேந்தராக மங்களேஸ்வரன்



கொழும்பு, ஜூலை 14

வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக, யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் முதல்வர் கலாநிதி த. மங்களேஸ்வரன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் யாழ். பல்கலைக்கழகத்தின் வளாகமாக இயங்கிவந்த "யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகம்" எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் "இலங்கை வவுனியா பல்கலைக்கழகம்" எனத் தரமுயரும் எனக் கல்வி அமைச்சர் ஜி. எல். பீரிஸினால் கடந்த மாதம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, வவுனியா பல்கலைக் கழகத்தைத் தாபிப்பதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அதன் ஒரு நிலையாக யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் முதல்வர் கலாநிதி த. மங்களேஸ்வரன் முதலாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பதவிக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் உட்பட்ட பலர் முயற்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மரபணு மாறிய கோவிட் திரிபுடன் 14 பேர் கொழும்பில் அடையாளம்!

கொழும்பு, ஜூலை 14

மரபணு மாற்றமடைந்த கோவிட் திரிபுகள் கொண்டதாக சந்தேகிக்கப்படும் 14 பேர் கொழும்பில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பெற்றுக்கொண்ட 25 எழுமாறான மாதிரிகளில், மரபணு மாற்றமடைந்த கோவிட் திரிபுகள் காணப்படுவதாக சந்தேகிக்கப்படும் 14 மாதிரிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, மாலைதீவுப் பிரஜை ஒருவர் உட்பட 19 பேர் இந்தியாவின் கொடிய 'டெல்டா' வைரஸ் தொற்றாளர்களாக கொழும்பு உள்ளிட்ட சில மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மேலும் சில பிரதேசங்களில் தனிமைப்படுத்தல் தளர்வு

கொழும்பு, ஜூலை 14

மட்டக்களப்பு, கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதனடிப்படையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுகுட்பட்ட மஞ்சஞ்தொடுவாய் வடக்கு கிராம சேவகர் பிரிவு மற்றும் மஞ்சஞ்தொடுவாய் தெற்கு கிராம சேவகர் பிரிவின் ஜின்னா வீதி ஆகிய பிரதேசங்களில் தனிமைப்படுத்தல் தளர்த்தப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தின் வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெந்தலை வடக்கு கிராம சேவகர் பிரிவின் ஓலந்த கிராமம் மற்றும் றப்பர் தோட்டம் ஆகிய பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தின் கொலன்னாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிங்கபுர கிராம சேவகர் பிரிவில் தனிமைப்படுத்தல் தளர்த்தப்பட்டுள்ளது. (இ)

# 'குடு நோனி' கைது

கொழும்பு, ஜூலை 14

பொதி சேவையைப் பயன்படுத்திப் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்ட 'குடு நோனி' என்றழைக்கப்படும் பெண், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர், பொதி சேவையை பயன்படுத்தி, நாடளாவிய ரீதியில் இவ்வாறு போதைப் பொருள்களை மிகவும் நூதனமான முறையில் விநியோகம் செய்துவந்துள்ளார்.

39 வயதான 'குடு நோனி' கொம்பனித்தெருவை வசிப்பிடமாகக் கொண்டவர்.

கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர், கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே குடு நோனியை கைது செய்ததாக, பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அனுராதபுரத்துக்கு பொதியொன்றை அனுப்பிய நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

# ஆபாச காட்சிகளை பதிவேற்றிய ஐவர் கைது!

கொழும்பு, ஜூலை 14

இணையத்தளத்தில் ஆபாசக் காட்சிகள் மற்றும் ஒளி படங்களை பதிவேற்றிய ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

புறக்கோட்டை, பிலியந்தலை, பூஜாபிட்டி, இராஜகிரிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சிலரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், சந்தேகநபர்கள் 25 முதல் 39 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸ் கணனி குற்றத்தடுப்பு பிரிவு முன்னெடுத்து வருகின்றது.

## யாழ்.குடாநாட்டுக்கு குடிதண்ணீர்:

# மீண்டும் கையிலெடுக்கப்பட்டது ஆறுமுகம் குடிதண்ணீர் திட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 14

இரணைமடு, கல்மடு, விசுவமடு, உடையார்கட்டு போன்ற குளங்களில் இருந்து வழிந்தோடி விரயமாகின்ற நீரை பயன்படுத்தி, யாழ். மாவட்டத்திற்கான நன்னீரை பெறுக்கொள்ளும் ஆறுமுகம் திட்டத்தினை மீண்டும் செயற்படுத்துவது தொடர்பாக சம்மந்தப்பட்ட தரப்புக்களுடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடினார்.

இந்த திட்டம் தொடர்பாக 1962 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பிரஸ்தாபிக்கப்பட்ட போதிலும், ஆனையிறவு கடல் நீரேரியில் பருவ கால மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோரின் எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி ஆனையிறவு கடல் நீரேரியில் 23 வீதமான பகுதியை மறித்து அணை அமைத்து, திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பாக தற்போதைய அரசாங்கத்தினால் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், பிரதேச மக்கள் மற்றும் சம்மந்தப்பட்ட தரப்புக்களுக்கு, புதிய திட்டம் தொடர்பாக தெளிவுபடுத்தி, கருத்துக்களை அறிந்து கொள்ளும் வகையில் நேற்றைய கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, நெதர்லாந்து அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் மறுசீரமைக்கப்பட்ட திட்டம் தொடர்பாக கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் த. இராஜகோபுவினால் தெளிவுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா மாவட்டத்தில் 45,000 பேருக்கு பைஸர்!

வவுனியா, ஜூலை 14

வவுனியா மாவட்டத்தில் 30 வயதிற்கு மேற்பட்ட 45 ஆயிரம் பேருக்கு பைஸர் கொவிட் தடுப்பூசிகள் ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த வாரம் 60 வயதுக்கு மேற்பட்ட 1000 பேருக்கு முதல் கட்டமாக சினோபார்ம் கோவிட் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. அதன் இரண்டாம் கட்டமாக சில தினங்களில் 30 வயதுக்கு மேற்பட்ட 45,000 பேருக்கு பைஸர் தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் சுகாதாரப் பிரிவினர் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் அரசாங்கம் மக்களுக்கு தடுப்பூசி வழங்கும் செயல்பாட்டை முன்னெடுத்து வருகின்றது.

அதன் அடிப்படையில் வவுனியா மாவட்ட மக்களின் நலனை கருத்தில் கொண்டு வன்னி இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கேமந்த பண்டாரவின் முயற்சியினால், வவுனியா சுகாதார துறையினரின் ஒத்துழைப்புடன் இவ்வாரம் 45,000இற்கும் மேற்பட்ட பைஸர் தடுப்பூசிகள் வவுனியா மாவட்டத்துக்கு எடுத்து வருவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதில் முதன்மை அடிப்படையில் மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்குவதற்கு ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தடுப்பூசி வழங்குவதற்கான நிலையங்கள் மற்றும் திகதிகள் என்பன பின்னர் அறிவிக்கப்படும் என சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.



# மன்னாரில் ஒதுங்கியது இந்திய நாட்டுப்படகா?

மன்னார், ஜூலை 14

மன்னார் பொலிஸ் பிரிவில் உள்ள சௌத்பார் கடற்கரை பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை இந்திய நாட்டுப் படகு என சந்தேகிக் கப்படும் படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

அந்தப் படகில் பதிவு இலக் கம், உரிமையாளர் பெயர் என எதுவுமே பொறிக்கப்படாத நிலையில் சிறிய உடைவுக ளுடன் நாட்டுப்படகு கரை ஒதுங்கியுள்ளது.

படகு காற்றின் வேகம் கார ணமாக கரையொதுங்கியுள் ளதா? அல்லது சட்ட விரோத கடத்தலுக்கு பயன்படுத்தப் பட்டு கைவிடப்படுள்ளதா? என்ற கோணத்தில் மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

# சிறுவர் துஷ்பிரயோக சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்ய விசேட அலகுகள்!

## ஒவ்வொரு மாகாணத்திலும் நிறுவப்படும்

**கொழும்பு, ஜூலை 14**

**துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகிய பிள்ளை களின் சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் ஒன்பது அலகுகளை மாகாண மட்டத்தில் நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

இது குறித்த அமைச்சரவை தீர்மானம் வருமாறு:-

பல்வேறு வகையில் துஷ் பிரயோகங்களுக்கு ஆளாகிய பிள்ளைகளால் வழங்கப்படும் குறித்த சம்பவத்திற்குரிய சாட்சி கள் மிகவும் முக்கியமானவை யாகும். எனினும், அவ்வாறு பாதிக்கப்பட்ட பிள்ளையொ ருவர் நீதிமன்றத்தில் திறந்த அரங்கில் சாட்சி வழங்கும் போது பல்வேறு பிரச் சினைகளுக்கு முகங் கொடுக்க நேரிடுவதால், குறித்த சாட்சி கள், ஒளிப்பதிவு செய்து பெற் றுக் கொண்டு சமர்ப்பிப்பதற் கான சட்ட ஏற்பாடுகள் 1999 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க சாட்சியங்கள் (விசேட ஏற் பாடு) சட்டத்தின் மூலம் இலங் கையின் நீதித்துறைக்கு அறிமு கப்படுத்தப்பட்டுள்ளது. அதற் கமைய, 2001 ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் காணொளிப் பதிவு செய்யும் அலகொன்றை ஸ்தாபித்து சாட்சிகளைப் பெற் றுக்கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது கொழும்பில் மாத் திரம் மேற்கொள்ளப்படுகின் றது. குறித்த வசதிகளை மாகாண மட்டத்தில் ஏற்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் ஒன்பது மாகாணங்களை உள்ளடக்கிய தாக மருத்துவமனை சார்ந்த சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் ஒன்பது அலகுகளை நிறுவுவதற்காக கல்வி அமைச் சர் அவர்கள் சமர்ப்பித்த யோச னைக்கு அமைச்சரவை அங் கீகாரம் வழங்கியுள்ளது.

# உப பொலிஸ் பரிசோதகர் 16 பேருக்கு பதவி உயர்வு

கொழும்பு, ஜூலை 14

உப பொலிஸ் பரிசோதகர் கள் 16 பேருக்கு பொலிஸ் பரி சோதகர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரச சேவைகள் ஆணைக் குழு மற்றும் பாதுபாப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் இந்த பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,700 ஆசிரியர்களுக்கு தடுப்பூசி

மட்டக்களப்பு, ஜூலை 04

மட்டக்களப்பு மாவட்டத் தில் தொடர்ச்சியாக கோவிட் தடுப்பூசிகள் ஏற்றும் நட வடிக்கைகள் நேற்றும் முன்னெ டுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத் தில் உள்ள பாடசாலைகளை திறக்கும் வகையில் ஆசிரியர்க ளுக்கான தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

மட்டக்களப்பு கல்வி வலயத் திற்குட்பட்ட பாடசாலைகளில் கற்பித்தல் செயல்பாடுகளை முன்னெடுக்கும் 1,700 ஆசிரியர் களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று காலை முதல் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மகாஜ னக்கல்லூரியின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று கோவிட் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு வலய கல் விப்பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமாரின் ஒழுங்க மைப்பில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத் துவர் நா.மயூரனின் வழிகாட் டலில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் கே.கிரிசுதனின் தலைமையில் இந்த தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

# பஸில் முன்வைத்த பத்திரத்துக்கு அனுமதி வழங்கிய அமைச்சரவை

கொழும்பு, ஜூன் 14

2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி வெளி யிடப்பட்டுள்ள 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்கான நிதி நிலைமை தொடர்பான அறிக் கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2003 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க அரச நிதி முகாமைத் துவ (பொறுப்பு) சட்டத்தின் 10 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுக ளுக்கமைய ஆண்டின் நடுப் பகுதியில் நிதி நிலைமை தொடர்பான அறிக்கை நிதி அமைச்சரால், ஒவ்வொரு நிதியாண்டிலும் யூன் மாத இறுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இதற்கமையவே நிதி நிலைமை தொடர்பான அறிக் கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோச னைக்கு அமைச்சரவை அங்கீ காரம் வழங்கியுள்ளது.

# மன்னாருக்கு மேலும் 22,230 பைஸர் தடுப்பூசி

## ஏற்றும் நடவடிக்கை இன்று ஆரம்பம்

மன்னார், ஜூலை 14

மன்னார் மாவட்டத்துக்கு என மேலும் வழங்கப்பட்டுள்ள 22 ஆயிரத்து 230 பைஸர் தடுப் பூசிகள் இன்று புதன்கிழமை முதல் 30 வயதுக்கு மேற்பட்ட மன்னார் மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்க ளுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பா ளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.



மன்னார் மாவட்ட பிராந் திய சுகாதார சேவைகள் பணி மனையில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

மன்னார் மாவட்டத்தில் கடந்த 5 ஆம் திகதி முதல் சமூ கத்தடுப்பூசி வழங்கலின் 2 ஆவது கட்டம் ஆரம்பிக்கப் பட்டு தற்போது 3 ஆவது கட் டம் இடம் பெற்று வருகின்றது.

2 ஆவது கட்டத்தில் பாது காப்புப் படையினரால் விநியோ கிக்கப்பட்ட 5 ஆயிரம் சினோ பார்ம் தடுப்பூசிகள் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும்,தேர்ந் தெடுக்கப்பட்ட அரச உத்தியோ கத்தர்களுக்கும் வழங்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்றுமுன்தினம் திங் கட்கிழமை வரை கிடைக் கப்பெற்ற 20 ஆயிரம் 'பைஸர்' தடுப்பூசிகளில் 19 ஆயிரத்து 500 வரையிலான தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.எஞ் சியுள்ள தடுப்பூசிகள் வழங் கப்பட உள்ளன.

செப்ரெம்பர் மாதம் நாட்டை முழுமையாக திறக்கவேண்டும் என்ற ஜனாதிபதியின் சிந்தனை யின் அடிப்படையில் இந்திய மீனவர்களுடன் தொடர்பு படுகின்ற மன்னார் மீனவர்க ளினால் ஏற்படக்கூடிய கொரோனா அச்ச நிலையை நீக்குவதற்காக மன்னார் மாவட்டத்துக்கு விசேடமாக குறித்த தடுப்பூசிகள் ஒதுக்கப் பட்டன.

மேலும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு எமக்கு மேலும் 22 ஆயிரத்து 230 பைஸர் தடுப்பூசிகள் அனுப்பி வைக்கப்பட்டு கிடைக்கப்பெற் றுள்ளன.

இவற்றினுடைய விநியோ கம் இன்று புதன்கிழமை முதல் ஆரம்பமாகும். இந்த தடுப் பூசிகள் மன்னார் மாவட்டத் தில் 5 அல்லது 6 நிலையங்க ளில் ஒவ்வொரு நாளும் வழங் கப்படும்.

இதன் போது 30 வயதுக்கு மேற்பட்ட மன்னார் மாவட்டத் தைச் சேர்ந்த நிரந்தர வதிவுரிமை பெற்ற அனைவரும் எந்த நிலை யத்திலும் தடுப்பூசிகளை பெற் றுக் கொள்ள முடியும்.

2 ஆம்,3 ஆம் நிலைய கடந்த கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் ஒரு வயதிலும் குறைந்த குழந் தைகளைக் கொண்டுள்ள தாய் மார்களுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் வாரத்தில் இடம் பெறும்.

இவர்கள் பொது மக்களுக் கான தடுப்பூசி வழங்கும் நிலை யங்களுக்கு சென்று தடுப் பூசியை பெற்றுக்கொள்ளத் தேவையில்லை.இவர்களுக்கு விசேட விதமாக வேறு நிலை யங்களில் எதிர்வரும் வாரம் வழங்கப்படும்.

இதுவரை மன்னார் மாவட் டத்தில் மொத்தமாக 899 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள் ளனர். இவர்களில் 882 பேர் இந்த வருடம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.இந்த மாதத்தில் தற்போது வரை 90 பேர் அடையாளம் காணப் பட்டுள்ளனர்-என்றார்.

# இலங்கை பெண்களை வலுவூட்ட அமெரிக்கா 150 மில்லியன் டொலர்

கொழும்பு, ஜூலை 14

சிறு வர்த்தகங்களுக்கு உத வியளிப்பதற்கும் இலங்கை பெண்களை பொருளாதார ரீதி யாக வலுவூட்டுவதற்கும் 150 மில்லியன் அமெரிக்க டொலர் களை ஐக்கிய அமெரிக்கா வழங்கியுள்ளது.

இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தினால் நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விட யம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுப்பர வல் ஏற்படுத்திய பொருளாதார சவால்களை சமாளிப்பதற்கு, இலங்கையிலுள்ள சிறு வர்த்த கங்கள் முயலும் இவ்வேளை யில் அவற்றுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் உதவியளித்து வருவதாக, அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஐக்கிய அமெ ரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது, உள்ளூர் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறையை முன்னேற்றுவதற்கும், தனியார் துறை முதலீட்டை வலுப்படுத் துவதற்கும், பெண் தொழில் முனைவோருக்கும் உதவியளிப் பதற்கும் இலங்கையில் டீ.எவ். சி.சி வங்கிக்கு 150 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்கியுள்ளது.

இக்கடனின் ஒரு பகுதி, இலங்கை பெண்களுக்குச் சொந்தமான அல்லது அவர்க ளது தலைமையிலான சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற் சிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

இது குறித்து இலங்கைக் கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி.டெப்லிட்ஸ் தெரிவிக்கையில்,

"பொருளாதார ரீதியாக வலி மையடைந்த பெண்கள் தங் களை மேம்படுத்துவதோடு, குடும்பங்கள், சமூகங்கள், நாடு களையும் மாற்றுகிறார்கள்.

சமூகங்கள் முன்னேற்றம டைய வேண்டுமாயின், வளங் கள் மற்றும் வாய்ப்புகளுக்கான அணுகல்கள் பெண்களுக்கு இருத்தல் அவசியம்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா நோயாளி தப்பியோட்டம்!

கொழும்பு, ஜுலை 14

பலாங்கொடை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கொரோனா நோயாளி ஒருவர் நேற்று பிற்பகல் மருத்துவமனையில் இருந்து தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவிசாவளை ஹெவஹின்னவில் வசிக்கும் 72 வயதான வரே மருத்துவமனையில் இருந்து தப்பியுள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் உள்ள சிங்கராஜா இடைநிலை கோவிட் சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்று வந்த இந்த நபர், நேற்று காலை பலாங்கொடை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

தப்பியோடியவரை பிடிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## திருமணம் செய்யவுள்ள மணமக்கள் மாகாணங்கள் இடையே பயணிக்கலாம்



கொழும்பு, ஜுலை 14

திருமண பந்தத்தில் இணையும் மணமகன், மணப் பெண் ஆகியோர் வெவ்வேறு மாகாணங்களில் வசிப்பவர்களாயின் அவர்கள் மாகாணங்களுக்கு இடையில் பயணிப்பதற்கு விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாடுகளின் போது, திருமண நிகழ்வுகளை நடத்துவதில் ஏற்பட்ட சிக்கல்களை கருத்தில் கொண்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், மணமகன் மற்றும் மணப்பெண் ஆகியோரின் பெற்றோர்களும் மாகாணங்களுக்கு இடையில் பயணிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளை மறுசீரமைக்க உதவி; நாடு கடத்தப்பட்டவர் கைது!

கொழும்பு, ஜுலை 14

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மறுசீரமைக்க உதவுவதற்கும் முள்ளியவளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் வைத்து 41 வயது நபர் ஒருவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையைச் சேர்ந்த சந்தேக நபர் 2019ஆம் ஆண்டு கட்டாருக்கு தப்பிச் சென்றுள்ளார். அவருக்கு எதிராக சர்வதேச பொலிஸாரின் நீல அறிவித்தல் (blue Interpol notice) அனுப்பப்பட்டது.

சந்தேக நபர் கத்தார் நாட்டில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். அவர் முள்ளியவளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ் சந்தேக நபருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைத்து அவரை தடுப்புக் காவலில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் எடுப்பார்கள் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

# பேச்சு சுதந்திரத்தை முடக்கும் தேவை அரசுக்கு கிடையாது

### அமைச்சர் கெஹலிய கூறுகிறார்



**கொழும்பு, ஜுலை 14**

**ஊடகங்களினதும்,பொதுமக்களினதும் பேச்சு சுதந்திரத்தை முடக்கவேண்டிய தேவை அரசாங்கத்திற்கு கிடையாது. பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் கடந்த வாரம் இடம் பெற்ற போராட்டத்தின் போது பாதுகாப்பு தரப்பினரால் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் ஊடகவியலாளர்கள் முதலில் முறைப்பாடளிக்க வேண்டும். முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவை பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஊடகவியலாளர்களினதும், நாட்டு மக்களினதும் பேச்சு சுதந்திரத்தை முடக்கவேண்டிய தேவை அரசாங்கத்திற்கு கிடையாது. அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள பேச்சு சுதந்திரத்தை ஒரு தரப்பினர் தவறான வழியில் பயன்படுத்தும் போது அதற்கு எதிராக நடவடிக்கைகள் உரிய நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும். இதனை பேச்சு சுதந்திரத்திற்கு எதிராக அரசாங்கம் செயல்படுகிறது என்று குறிப்பிட முடியாது.

நாட்டு மக்களுக்கு உண்மையான தகவல்களை வழங்கும் பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு, ஊடகங்களின் செயல்பாடுகளை கண்காணிக்கும் பொறுப்பு ஊடகத்துறை அமைச்சுக்கு உள்ளது.

இவ்விடயத்தில் பொறுப்புடன் செயல்படுவோம். நாட்டு மக்கள் உண்மை விடயங்களை அறிந்துக் கொள்ள வேண்டும்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்திற்கு எதிராக கடந்த வாரம் பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் தொழிற்சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது போராட்டகாரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இதன்போது செய்தி சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுப்பட்ட ஊடகவியலாளர்கள் மீது பொலிஸார் தாக்குதலை முன்னெடுத்ததாக குறிப்பிடப்படுகிறது.

இச்சம்வபத்தினால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் இருப்பின் அவர் முதலில் முறைப்பாடளிக்கவேண்டும். அவர் வழங்கும் முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்விடயம் தொடர்பில் ஊடகத்துறை அமைச்சர் என்ற ரீதியில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துள்ளேன்.

தனியார் ஊடகத்துக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் கடந்த வாரம் பாராளுமன்றில் உரையாற்றினார். இதில் எவ்வித உண்மை தன்மையும் கிடையாது.

ஒரு சில ஊடகங்களின் செயபாடுகள் ஊடக கொள்கைக்கு முரணாக காணப்படுகிறது. அதற்கு முன்னெடுக்க வேண்டிய சட்ட நடவடிக்கைகள் குறித்து வழக்கறிஞர்களுடன் ஆலோசனை கோரப்பட்டது.

இதனை எவ்வாறு தவறான செயற்பாடு என்று குறிப்பிட முடியும். சட்ட கட்டமைப்பில் இருந்து அனைத்து பிரச்னைக்கும் தீர்வு காண முயல்வதை எதிர்தரப்பினர் அரசியலாக்க முனைகிறார்கள்.

15 வயதுச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்காக இணையம் ஊடாக விற்பனை செய்யப்பட்டதாக வெளியாகியுள்ள விடயம் சமூகத்தின் மத்தியில் பாரிய அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். ஒரு சில சமூக வலைத்தளங்கள் கடுமையாக கண்காணிக்கப்படும்-என்றார்.

# இணையவழி கல்வியிலிருந்து ஆசிரியர்கள் விலகியுள்ளமை படுமோசமான செயல்பாடு

### அமைச்சர் கெஹலிய குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுலை 14

கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலத்திற்கு எதிராக பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதால் கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்விடயத்தில் எவ்வித அரசியல் தலையீடுகளும் கிடையாது. இக்காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்கள் இணையவழிக்கல்வி நடவடிக்கைளில் இருந்து விலகியுள்ளமை படுமோசமான செயல்பாடாகவே கருதவேண்டும் என அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த வாரம் பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் இலங்கை ஆசிரிய சங்கத்தினரும், தொழிற்சங்கத்தினரும் போராட்டத்தில் ஈடுப்பட்டார்கள்.

கோவிட் -19 வைரஸ் தாக்கத்தை கருத்திற் கொண்டு போராட்டங்கள் மற்றும் ஒன்றுகூடலுக்கு மறு அறிவித்தல் விடுக்கும் வரையில் தடை விதிக்கப்பட்டுள்ளன.

அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு புறம்பாகவே இவர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டார்கள். இதன் காரணமாக கைது செய்யப்பட்டு தற்போது தனிமைப்படுத்தப்ப ட்டுள்ளார்கள். தனிமைப்படுத்தல் தொடர்பிலான தீர்மானத்தை அரசாங்கம் எடுக்கவில்லை. சுகாதார தரப்பினரது பரிந்துரைகளுக்கு அமையவே தனிமைப்படுத்தப்பட்டுள் ளார்கள் இதில் எவ்வித அரசியல் நோக்கங்களும், தலையீடுகளும் காணப்படவில்லை.

தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக கருதினால் உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம். அதற்கான பல வழிமுறைகள் காணப்படுகின்றன. இவர்களுக்கு சார்பாக ஆசிரியர்கள் இணையவழிக் கல்வி நடவடிக்கையில் இருந்து விலகியுள்ளமை முற்றிலும் தவறான செயல்பாடாகும்.

ஒரு தரப்பினரின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஆசிரியர்கள் 43 இலட்சம் மாணவர்களை பகடைகாயாக வைப்பது எந்தளவிற்கு நியாயமானது என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் கல்வி துறைக்கு பாரிய சவால் ஏற்பட்டுள்ளன. மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்த பிரத்தியேக தொலைக்காட்சி அலைவரிசைகளை உருவாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்றார்.

(அ)

# வடக்கில் விவசாயிகளும் கூட்டுறவும்

**“ மக்கள் சந்தைகளிலோ மொத்த விற்பனை நிலையங்களிலோ கொள்வனவு செய்வதற்காக ஒன்றாக கூடுவதனால் கொரோனா தொற்றின் பரவல் அதிகமாக்கப்படுவதற்காக சாத்தியப்பாடுகள் இருக்கிறது என்பதால் மக்கள் உள்ளூர் கடைகடைகளில் மரக்கறிகளை கொள்வனவு செய்யவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதன்போது அதிகூடிய விலைக்கு மக்கள் மரக்கறிகளை கொள்வனவு செய்யும் நிலையேற்பட்டதை அவதானிக்க முடிந்தது**



விவசாய சேகரிப்பு நிலையம் - அச்சுவேலி


விவசாய சேகரிப்பு நிலையத்தின் தரப்படுத்தல் செயல்பாடு - அச்சுவேலி


மரக்கறி மொத்த விற்பனை நிலையம் - அச்சுவேலி


மரக்கறி மொத்த விற்பனை நிலையம் - அச்சுவேலி

கோவிட் தொற்று சர்வதேச ரீதியாக மருத்துவ நெருக்கடியை உருவாக்கியுள்ளது என்பதை தாண்டி சமூக பொருளாதார தளங்களிலும் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்கள் அடுத்த கட்டமாக விவசாய செயற்பாடுகளிலும் உணவு நுகர்வு முறையிலும் பாரிய தாக்கம் ஏற்படவுள்ளது என எதிர்வு கூறுகின்றனர். இலங்கை போன்ற வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளிற்கு பாரிய சாவாலாக இது அமையவுள்ளது. அண்மை காலங்களில் அரசின் இறக்குமதி பொருளாதார கொள்கை மாற்றங்கள் குறிப்பாக மஞ்சள், உழுந்து இறக்குமதிக்கான கட்டுப்படுகள், பால்மா, கோதுமைமா போன்ற இறக்குமதி செய்யப்படும் உணவுகளுக்கான விலையேற்றங்கள் போன்றவற்றிற்கூடாக இந்த நிலமையின் பாதிப்பை விளங்கிக்கொள்ள முடிகிறது.

இவ்வாறான நிலமை மக்களை இந்த பொருட்களுக்கு மாற்றீடான புதிய உணவு முறையை நோக்கியும் நகர்த்துகிறது. அத்துடன், உணவு பாதுகாப்பு தொடர்பிலும் சிந்திக்க தூண்டியுள்ளது. மேலும், அசேதன பசளைகளின் இறக்குமதி தடை, விவசாயம் சார்ந்த உள்ளீடுகளுக்கான விலையேற்றங்கள் போன்றவற்றினூடாக விவசாய உற்பத்திகளில் வீழ்ச்சி ஏற்படும் நிலையும் உருவாகியுள்ளது. விவசாயம் முதல் நுகர்வு வரை சங்கிலித் தொடராக மக்களை இது நேரடியாக பாதிக்கிறது.

விவசாயிகள் நீண்ட காலங்களாக எதிர்நோக்கும் பிரச்சனைகளான, காலநிலை சார்ந்த அழிவுகள், விவசாய நிலங்கள் துண்டாடல், வியாபாரிகளின் சுரண்டல்கள் போன்ற பிரச்னைகள் தற்போதய நிலமையால் மேலும் கூர்மையடைந்துள்ளன. இவ்வாறான அகப்புற காரணிகளால் விவசாயிகள் தமது உற்பத்திகளை சந்தைப் படுத்தும் போது பொருத்தமான விலையை பெற்றுக் கொள்ள முடிவதில்லை.

**விவசாய சேகரிப்பு**

இப்படியான நிலையில் சிறுவிவசாயிகளின் அனைத்து உற்பத்திகளையும் கொள்வனவு செய்து பொருத்தமான சந்தைகளுக்கு அனுப்பி, அவற்றுக்கான நியாயமான விலையினை பெற்றுக்கொடுக்கும் முகமாகவும். மேலும் கழிவு முறையிலான கொள்வனவினை தவிர்த்து அவற்றுக்கான உச்ச விலையினை பெற்றுக் கொடுக்கும் முகமாகவும், பல்வேறுபட்ட மனித வளம், வாகன உட்கட்மைப்பு வசதிகளுடன் விவசாயிகளுக்காக இயங்கும் ஒரு விவசாய உற்பத்திகளை சேகரிப்பதற்கான நிலையம் அவசியமானது. ஆனால் இவ் நிலையத்தை விவசாயிகளால் தொடர்ச்சியாக நிர்வகிக்க முடியுமா? யார் இதை சமூக அக்கறையுடன் விவசாயிகளின் நலன் கருதி நிர்வகிக்க முடியும்? எனும் கேள்வி எழுகிறது.

பிரதேச மக்கள் மற்றும் விவசாயிகளிடையில் நெருக்கமான தொடர்பை கொண்ட சமூக அமைப்பாக கூட்டுறவு அமைப்புக்களே உள்ளன. தற்போதைய நெருக்கடியான காலகட்டத்திலும்கூட மக்களும் விவசாயிகளும் நன்மைபெறகூடிய வகையில் விவசாயம், நுகர்ச்சி சார்ந்த செயற்திட்டங்களை இவை முன்னெடுக்கின்றன. குறிப்பாக விவசாய சேகரிப்பு நிலையம், சேதன பசளை உற்பத்தி, விவசாயிகளுக்கான கடன்கள், நுகர்ச்சியின் போதான சேமிப்பு திட்டங்கள், மரக்கறி விற்பனை போன்றவற்றை இவை செய்துவருகின்றன.

அந்தவகையில் கூட்டுறவுச்சங்கங்களும் அப்பிரதேச விவசாய சம்மேளனங்களும் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து சிறு விவசாயிகளை மையப்படுத்தி அச்சுவேலி, வேலணை பிரதேசங்களில் இரண்டு சேகரிப்பு நிலையங்களை இயக்கிவருகின்றன. இவை விவசாயிகளின் நேரடியான கண்காணிப்புடன், வெளிப்படையாக சந்தை விலைகளை காட்சிப் படுத்தி மரக்கறிகளின் கொள்வனவு விலைகளை தீர்மானிக்கின்றன. இச்செயற்பாடுகளினூடாக சிறு விவசாயிகள் தமது குறைந்தளவான உற்பத்திகளுக்கு நியாய விலையை பெற்றுக்கொள்ள முடிகிறது. இந்த சேகரிப்பு நிலையங்கள் செயல்படுவதால் அந்த பிரதேசங்களில் விவசாய உற்பத்திகள் சேகரிக்கப்படுகிறது என்பதை தாண்டி ஆரோக்கியமான விலைக்கான போட்டி அப்பிரதேசங்களில் உருவாக்கப்பட்டுள்ளது.

| மாதம் | நிறை (KG) | பெறுமதி (Rs) |
|---|---|---|
| பங்குனி | 14,208 | 1,888,075 |
| சித்திரை | 26,102 | 4,036,666 |
| வைகாசி | 23,032 | 3,083,842 |
| ஆனி | 15,837 | 3,217,379 |
| மொத்தம் | 79,179 | 12,225,963 |

தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் சேகரிப்பு நிலை யம் ஆரம்பம் முதல் சிறு விவசாயிகளிடமிருந்து, எதுவித கழிவு அறவீட்டு நடமுறைகளுமின்றி மரக்கறிகளை சேகரித்து வருகிறது. இதனால் சிறு விவசாயிகளும் கூட தமது குறைந்த அளவிலான உற்பத்திகளுக்கு நியாயமான விலையை பெற்றுக்கொள்ள முடிகிறது. அதே நேரம் விவசாய சேகரிப்பு நிலையத்திற்கு விவசாயிகளே தமது உற்பத்திகளை நியாயமான முறையில் தரப்படுத்தி வழங்கும்போது அவர்களின் தரத்திற்கேற்ப மேலும் அதிக விலைக்கு அவர்களின் உற்பத்திகளை விற்ககூடியதாக இருக்கும்.

இவ்வாறு சேகரிக்கப்படும் மரக்கறிகள் வேலணை மற்றும் அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களால் மரக்கறி விற்பனைக் கடைகள் உருவாக்கப்பட்டு அதற்கூடாக விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன் சில மரக்கறி வகைகளினை தம்புள்ளை பொருளாதார மத்தியநிலையத்திற்கும், கொழும்புச் சந்தைக்கும் சந்தைப்படுத்தப்படுகிறது. இவற்றிற்கு மேலதிகமாக யாழ் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் கிளைளூடாகவும் விற்பனை செய்யப் படுகின்றன. இதனால் சாதாரண மக்களும் குறைந்த விலையில் மரக்கறிகளை கொள்னவு செய்ய முடிகிறது.

**மரக்கறி விநியோகம்**

மக்கள் சந்தைகளிலோ மொத்த விற்பனை நிலையங்களிலோ கொள்வனவு செய்வதற்காக ஒன்றாக கூடுவதனால் கொரோனா தொற்றின் பரவல் அதிகமாக்கப்படுவதற்காக சாத்தியப்பாடுகள் இருக்கிறது என்பதால் மக்கள் உள்ளூர் கடைகளில் மரக்கறிகளை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதன்போது அதிகூடிய விலைக்கு மக்கள் மரக்கறிகளை கொள்வனவு செய்யும் நிலையேற்பட்டதை கடந்த மாதங்களில் அவதானிக்க முடிந்தது. இந்த பிரச்சினைக்கான ஒரு மாற்றுத்தீர்வாக நேரடியாக மக்களிடம் சென்று மரக்கறிகளை நியாயமான விலைக்கு விநியோகம் செய்யும் முயற்சியை கூட்டுறவுகள் முன்னெடுக்கின்றன.

மேலும் எந்தவிதமான மாற்று தீர்வுகளையும் உருவாக்காமல் உடனடியாக உரம் தடைசெய்யப் பட்டதன் காரணமாக கடந்த வருட விவசாய உற்பத்திகளுடன் ஒப்பிடும்போது எதிர்வரும் வருடங்களில் உற்பத்திகளின் அளவு கணிசமாக குறைவடையும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இறக்குமதிப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதனால் மரக்கறிகள் மற்றும் விவசாய உற்பத்திகளின் விலைகள் கணிசமாக அதிகரிக்கும். இப்படியான நிலையில் தனியார் கடைக்காரர்களாலோ அல்லது வியாபாரிகளாலோ அதற்கான தீர்வுகளை வழங்க முடியாது.

இந்த நிலை சாதாரண மக்களின் உணவுமுறைகளில் மாற்றத்தைக் கொண்டுவரும். அதிகூடிய விலைகொடுத்து மரக்கறிகளை கொள்வனவு செய்யமுடியாத குடும்பங்களில் போசாக்கின்மை பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் அபாயம் உள்ளது. ஆனால், கூட்டுறவுச்சங்கங்களுக்கு ஒரு சமூகப்பொறுப்புள்ளது என்பதை கூட்டுறவுத்துறை விளங்கிக்கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் இப்பொழுதிருந்தே தமது சேவைகள் முன்னெடுக்கப்பட்டால்தான் சிறிய கிராமங்களுக்குள்ளும் சென்று நியாயமான விலையில் எல்லா மக்களுக்கும் மரக்கறிகளை வழங்க கூடிய நிலையை உருவாக்கலாம் என்று எண்ணி நேரடி யாக மரக்கறி வினியோக செயற்பாட்டை முன்னெடுக்கிறார்கள். அந்த வகையில் கடந்த இரு வாரங்களில் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூபாய் 365,000 பெறுமதியான 4,020 கி.கி. மரக்கறிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த விநி யோக செயற்பாட்டில் அச்சுவேலி, வேலனை கூட்டுறவு சங்கங்களுக்கு மேலதிகமாக கைதடி, பளை கூட்டுறவு சங்கங்களும் புதிதாக இணைந்துள்ளன. விவசாய சேகரிப் பும் விநியோகமும் விவசாயிகளையும் நுகர்வோரையும் கூட்டுறவு அமைப்புகளூடாக ஒரே நேர் கோட்டில் இணைத்துள்ளன.

த. கஜீபன்
க. சுதர்சன்

ஏனைய கூட்டுறவுகளும் மக்களின் தற்கால நலன் கருதியும், உங்கள் வளர்ச்சி கருதியும் விவசாயத் துறை யில் முழுவீச்சில் பயணிக்க வேண்டிய தேவை ஏற்பட் டுள்ளது. குறிப்பாக விவசாயிகளுக்கான பயிற் செய்கை கடன்களை வழங்கவும் விவசாய உள்ளீட்டு பொருட்களை விநியோகிக்கவும், விளைச்சல்களை நியாய விலைக்கு கொள் வனவு செய்யவும் மற்றும் சந்தைப்படுத்தல்களில் ஈடுபடவும் கூட்டுறவு இயக்கம் தயாராகவுள்ளதா?

கட்டுரையாளர்கள் இருவரும் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் உத்தியோகத்தர்கள்.

**கூட்டுறவுப் பயணம்** - இந்த குறிப்புகள் கூட்டுறவு இயக்கத்தின் வரலாறு, அதன் சமகால சவால்கள் மற்றும் எதிர்கால சாத்தியப்பாடுகளை பதிவுசெய்யும்.

ஈழநாடு



# பாதிப்பு அதிகரிப்பை தடுக்க இரு வேறு தடுப்பூசிகளை பயன்படுத்தும் தாய்லாந்து

**“ புதிய கொள்கைப்படி சினாவாக் இரண்டு டோஸ்களை போடுவதற்கு பதிலாக இனி முதல் டோஸ் ஆக சினாவாக் தடுப்பூசியை போட்டுக் கொண்டவர்கள், இரண்டாவது டோஸ் ஆக அஸ்ட்ராசெனகா தடுப்பூசி மருந்தை போட்டுக் கொள்வார்கள்.**

தாய்லாந்தில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வருவதையடுத்து, அங்கு புழக்கத்தில் உள்ள சீனாவின் சினோவாக் மருந்துடன் அஸ்ட்ராசெனகா மருந்தை கலந்து எதிர்ப்பாற்றலை பெருக்கும் வகையில் தமது தடுப்பூசி கொள்கையை தாய்லாந்து அரசு மாற்றியுள்ளது.

தாய்லாந்தில் சினோவாக் கொரோனா தடுப்பூசியின் இரண்டு டோஸ்களை முழுமையாக போட்டுக் கொண்ட நூற்றுக்கணக்கான சுகாதார ஊழியர்களுக்கு மீண்டும் வைரஸ் கண்டறியப்பட்டதால், இந்த முடிவை தாய்லாந்து அரசு எடுத்துள்ளது.

புதிய கொள்கைப்படி சினாவாக் இரண்டு டோஸ்களை போடுவதற்கு பதிலாக இனி முதல் டோஸ் ஆக சினாவாக் தடுப்பூசியை போட்டுக் கொண்டவர்கள், இரண்டாவது டோஸ் ஆக அஸ்ட்ராசெனகா தடுப்பூசி மருந்தை போட்டுக் கொள்வார்கள்.

ஏற்கெனவே, இரண்டு டோஸ் சினோவாக் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களும் மூன்றாவது டோஸ் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.



அவர்கள் மூன்றாவது டோஸ் ஆக அஸ்ட்ராசெனகா மருந்தையோ எம்ஆர்என்ஏ தடுப்பூசிகளான பைஸர் அல்லது பயோஎன்டெக்கையோ போட்டுக் கொள்ளலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

முதல் இரண்டு டோஸ்களை போட்டுக் கொண்ட மூன்று முதல் நான்கு வார காலத்தில் மூன்றாவது எதிர்ப்புத்திறன் கூட்டும் பூஸ்டர் மருந்து போடப்படும் என்று தாய்லாந்து நோய்த்தொற்று தடுப்புக் கமிட்டி அறிவித்துள்ளது.

தாய்லாந்தில் தற்போது கையிருப்பில் கிடைக்கும் ஒரே தடுப்பூசி மருந்தாக அஸ்ட்ராசெனகா உள்ளது. அந்நாட்டுக்கு பைஸர், பயோஎன்டெக் தடுப்பூசி மருந்துகளை தருவதாக அமெரிக்கா கூறியுள்ளது. அந்த தடுப்பு முரந்து விரைவில் தாய்லாந்துக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நாட்டில் கடந்த பெப்ரவரி மாதம், முதல் தவணையாக சுகாதார ஊழியர்களுக்கு சீனாவின் சினாவாக் தடுப்பூசி போடும் பணி தொடங்கியது. கடந்த ஞாயிற்றுக்கிழமை தங்களுடைய நாட்டில் ஆறு இலட்சத்து 77 ஆயிரம் மருத்துவ ஊழியர்கள் முழுமையாக தடுப்பூசி போட்டுக் கொண்டதாக அந்நாட்டின் சுகாதாரத்துறை தெரிவித்தது.

இதில் கடந்த ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையிலான காலகட்டத்தில் 618 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. ஒரு செவிலியர் இறந்து விட்டார். ஒரு மருத்துவ ஊழியர் கவலைக்கிடமாக உள்ளார்.

நியூ இங்கிலாந்து மருத்துவ சஞ்சிகையின் ஆய்வறிக்கையில், சிலியில் கண்டறியப்பட்ட தரவுகள் அடிப்படையில் சினோவாக் தடுப்பூசி மருந்துக்கு கொரோனா வைரஸ் எதிர்ப்பாற்றல் திறன் 65.9 சதவீதம் உள்ளது. மருத்துவமனையில் சேரும் நிலையை இது 87.5 சதவீதம் தவிர்க்கிறது. இறப்பு விகிதம் 86.3 சதவீதம் அளவுக்கு குறைகிறது என்று கூறப்பட்டுள்ளது. தாய்லாந்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை புதிதாக 9,418 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டது. அங்கு ஒரே நாளில் 91 பேர் கொரோனாவால் இறந்துள்ளனர்.

**- பி.பி.சி.**

---



# கடல் மாசு: பட்டினியால் இறக்கும் கடற்பசுக்கள்

அமெரிக்கவின் புளோரிடா மாகாணத்தில் இந்த ஆண்டு அதிகளவிலான கடற்பசுக்கள் பட்டினியால் இறந்துள்ளனவென வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புளோரிடா அருகில் உள்ள கடற்பகுதியில் கடந்த ஜனவரி 1 முதல் ஜூலை 2 வரை குறைந்தது 841 கடற்பசுக்கள் இறந்துள்ளன.

இதற்கு முன்பு கடந்த 2013 ஆம் ஆண்டு நச்சு பாசி காரணமாக 830 கடற்பசுக்கள் இறந்ததே அதிகபட்ச எண்ணிக்கையாக இருந்தது.

கடற்பசுக்கள் உணவுக்காக நம்பியிருக்கும் கடலடியில் உள்ள புற்கள், கடல் மாசு காரணமாக அழிந்து வருகிறது என உயிரியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புளோரிடாவின் கடற்கரைகளில் அதிகரித்து வரும் கழிவு மாசுபாடுதான் முக்கிய பிரச்னை என்று அவர்கள் கூறுகிறார்கள். இதனால், கடலடியில் உள்ள புற்கள் வேகமாக அழிந்து வருகின்றன.

பெரும்பாலான மரணங்கள் குளிர் கால மாதங்கள் ஏற்படுகின்றன என்றும், கடற்பசுக்கள் உணவு தேடி இந்தியன் நதி லகூனுக்கு இடம்பெயர்ந்து சென்ற போது அங்கு பெரும்பாலான கடலடி புற்கள் அழிந்திருந்தன என்றும் புளோரிடாவின் மீன் மற்றும் வனவிலங்கு ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வெப்பம் அதிகரித்து வருவதால், அத்திலாந்திக் கடற்கரையில் கடற்பசுக்கள் இடம்பெயர்ந்து செல்கின்றன. இதன் காரணமாகக் கடந்த மாதம் அதிகளவிலான உயிரினங்கள் படகு மோதி இறந்துள்ளன என தரவுகள் கூறுகின்றன.

இந்த ஆண்டில் இதுவரை 63 கடற்பசுக்கள் படகு மோதி இறந்துள்ளன. படகுகள் மோதுவது இந்த கடல் வாழ் உயிரினங்களுக்கு ஒரு முக்கிய ஆபத்தாக உள்ளதாக ஆராய்ச்சி நிறுவனம் கூறியுள்ளது.

**“ வெப்பம் அதிகரித்து வருவதால், அத்திலாந்திக் கடற்கரையில் கடற்பசுக்கள் இடம்பெயர்ந்து செல்கின்றன. இதன் காரணமாகக் கடந்த மாதம் அதிகளவிலான உயிரினங்கள் படகு மோதி இறந்துள்ளன என தரவுகள் கூறுகின்றன.**

கடற்பசுக்களை அச்சுறுத்தலில் இருக்கும் உயிரினமாகக் கடந்த 2017ஆம் ஆண்டு அமெரிக்க அறிவித்தது. ஆனால், இதனைப் பாதுகாக்கத் தீவிர நடவடிக்கை தேவை என ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

புளோரிடா கடலில் கிட்டதட்ட 6,300 கடற்பசுக்கள் வாழுவதாக அரசு கூறுகிறது. சமீபத்திய மாதங்களில், புளோரிடாவில் உள்ள கடல் உயிரியலாளர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் கடற்பசுக்கள் இறப்பது குறித்து அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். ■

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**


**மாதிரிப் பரீட்சை**
**வினாத்தாள் I**

**நேரம் - 45 நிமிடம்**


21. | நீலம் | பச்சை | மஞ்சள் | வெள்ளை | கறுப்பு |

என்ற ஒழுங்கில் நிற அட்டைகள் அடுக்கப்பட்டுள்ளன. இவ் ஒழுங்கை அடிப்படையாகக் கொண்டு சரியான விடையைத் தெரிவு செய்க.
1) 13 ஆவதாக வரும் அட்டை மஞ்சள் நிறமாகும்.
2) 18 ஆவதாக வரும் அட்டை பச்சை நிறமாகும்.
3) 9 ஆவதாக வரும் அட்டை நீல நிறமாகும்.

22. சதுரவடிவக் கடதாசி ஒன்றை உருவில் காட்டியவாறு புள்ளிக்கோடுகள் வழியே மடித்து C இல் குறிப்பிட்டுள்ளவாறு முக்கோணி x வெட்டி நீக்கிய பின் விரிக்கும்போது தோன்றும் சரியான வடிவத்தைத் தெரிவு செய்க.




A B C



(1) (2) (3)

23. இடைவெளியில் வரவேண்டிய எழுத்துக் கூட்டத்தைத் தெரிவு செய்க.


M N O    O P Q    Q R S    ..............................


1) S T U    2) T U V    3) S V W

24. தரப்பட்ட கூற்றுக்குச் சரியான காரணத்தைத் தெரிவு செய்க.
" கொரோனா நோயை ஒழிக்க வேண்டும் "
1) முகக்கவசம் அணிவதால்
2) கைகளைக் கழுவ வேண்டியிருப்பதால்
3) கொள்ளை நோய் என்பதனால்

25. கீரை வகைகளைச் சமைக்கும்போது உப்பு நீரில் இடுவதற்கான காரணம்.
1) நீண்ட காலம் பாதுகாக்க
2) கிருமிகளை அழிப்பதற்கு
3) விரைவாக வேகவைப்பதற்கு

26. தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.






(1) (2) (3)

27. ஆறு விளிம்புகளைக் கொண்ட திண்மவுருவும், இரண்டு சமச்சீர் அச்சுக்களைக் கொண்ட தளவடிவமும் முறையே,
1) சதுரமுகி, செவ்வகம்    2) கனவுரு, சதுரம்    3) நான்முகி, செவ்வகம்

28. மே மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமை எனின், அம்மாதத்தில் உள்ள புதன்கிழமைகளினதும் சனிக்கிழமைகளினதும் எண்ணிக்கை முறையே.
1) 5, 4    2) 5, 5    3) 4, 5

29. "முயற்சி செய்தால் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையலாம்" என்பது.
1) இது எப்போதும் உண்மையாகும்.
2) இது பெரும்பாலும் உண்மையாகும்.
3) இது ஒருபோதும் உண்மையானதன்று.


30. 

முழு உருவின் பரப்பளவானது நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவைப் போல் எத்தனை மடங்கு பெரியது?
1) மூன்று மடங்கு    2) இரண்டு மடங்கு    3) நான்கு மடங்கு

31. " நல்லவர்களுக்குச் செய்த உதவி" எதைப் போன்றது?
1) தாமரை இலைமேல் நீர்த்துளி போன்றது.
2) கல்லின் மேல் எழுத்தைச் செதுக்குவதைப் போன்றது.
3) சூரியனைக் கண்ட பனி போன்றது.

32. "மக்கள்" என்ற சொல்லில் ஓரெழுத்தை நீக்கினால் வரும் சொல்லின் ஒத்த பதத்தைக் குறித்து நிற்பது?
1) புத்திரன்    2) புத்திரி    3) மகள்

❖ **கீழ்வரும் வரிப்படத்தை அவதானித்து 33 ஆம் 34 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**




33. மூன்று உணவுகளையும் விரும்புவோர் எத்தனை பேர்?
1) 6    2) 7    3) 1

34. தோசையை மட்டும் விரும்புவோர் எத்தனை பேர்?
1) 3    2) 1    3) 2

35. 1 லீற்றர் பெற்றோலில் 20 கிலோ மீற்றர் பயணம் செய்யும் வாகனமொன்று 120 கிலோமீற்றர் பயணம் செய்யத் தேவையான பெற்றோலின் அளவு யாது?
1) 20 லீற்றர்    2) 6 லீற்றர்    3) 5 லீற்றர்

❖ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

36. பார்வை : கண்,    நுகர்தல் : ..............................
1) தோல்    2) நாக்கு    3) மூக்கு

# அரசிலிருந்து வெளியேற்றப்பட்டால் மக்களின் மடியில்தான் விழுவேன்!

## குரைக்கும் நாய்களுக்குக் கல்லெறியப்போனால் எனது பயணமே தடைப்படும் என்கிறார் கம்மன்பில

கொழும்பு, ஜூலை 14

**“அரசிலிருந்து நான் வெளியேற்றப்படும் பட்சத்தில் மக்களின் மடியில்தான் விழுவேன். நாய்கள் குரைக்கட்டும். அவற்றின் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்துவதற்கு நின்றால் எனது பயணமே தடைப்படும். எதற்காகவும் என்னை மாற்றிக்கொள்ளப்போவதில்லை.”**

- இவ்வாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சரிடம், அரசிலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் பங்கேற்றிருந்த அமைச்சர், வேகப்பந்து வீச்சாளர்கள், சுழல்பந்து வீச்சாளர்கள் என அனைவரும் பங்கேற்றுள்ளீர்கள் என ஊடகவியலாளர்களை நோக்கி புன்னகையுடன் விளித்தார்.

இதன்போது நீங்கள் ஆட்டமிழந்து விடுவீர்கள் போல் உணர்கின்றோம் என ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்தார். (நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் அரச கூட்டணிக்குள் ஏற்படுள்ள பிரச்னைகளை மையப்படுத்தியே இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டது)

இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

“அப்படியா? ஆட்டமிழக்க வைப்பதற்கு தீவிர முயற்சிகள் இடம்பெறவே செய்கின்றன. ஆனாலும், ஆட்டமிழக்காது ஆடி வருகின்றேன். எல்லாப் பந்தையும் அடித்தாடாமல் இருப்பதுதான் நீண்ட இனிங்ஸின் இரகசியம்” என்றார்.

கேள்வி: - ஆனால், பந்து விக்கெட்டுக்கு வந்தால்?

பதில்: - முடிந்தால் விக்கெட்டை எடுத்துக் காட்டுங்கள். ஆட்டமிழப்பு பற்றி எந்தவொரு



அறிவிப்பும் இல்லைதானோ.

கேள்வி: - கம்மன்பில அரசியிலிருந்து வெளியேறுவார் அல்லது வெளியேற்றப்படுவார் எனக் கூறப்படுகின்றதே.?

பதில்: - என்னை வெளியேற்றினால் மக்களின் மடியில்தான் விழுவேன்.

கேள்வி: - எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் நீங்கள் எடுத்த முடிவு தவறு என்ற நிலைப்பாட்டில் சில அமைச்சர்கள் இன்றளவிலும் உள்ளனரே.?

பதில்: - அரச தலைவர், அரசாங்கத்தின் தலைவர், அமைச்சரவையின் தலைவர், பாதுகாப்பு படைகளின் தலைவர் என நான்கு பதவிகளை வகிக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜூன் 13ஆம் திகதி அறிவிப்பொன்றை விடுத்தார். ஜனாதிபதியின் தலைமையில் பிரதமரின் பங்குபற்றலுடன் நடைபெற்ற வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உப குழுக்கூட்டத்தின்போதே எரிபொருள் விலையை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது என அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், எரிபொருள் விலை உயர்வை எவராவது சவாலுக்குட்படுத்துவார்களாயின் ஜனாதிபதி பொய்யுரைத்துள்ளார் எனக் கூறவே அதன்மூலம் விளைகின்றனர் எனப் பொருள்படுகின்றது. அவ்வாறானவர்களிடம் ஜனாதிபதி மீது நம்பிக்கையில்லையா?, அவ்வாறு நம்பிக்கையில்லையெனில் எதற்காக ஜனாதிபதியின் கீழ் இருக்கின்றீர்கள்? என அவர்களிடம் கேள்வி எழுப்புங்கள்.

கேள்வி: - நீங்கள் அரசிலிருந்து வெளியேற்றப்படுவீர்கள் என எவராவது குறிப்பிட்டால் உங்களின் பதில் என்னவாக இருக்கும்?

பதில்: - என்னை வெளியேற்றுவார்களா? இல்லையா? என்பது தொடர்பில் தேடிப் பார்த்த, அதற்கேற்ற வகையில் எனது நடவடிக்கைகளை மாற்றிக்கொள்வதற்கு நான் தயாரில்லை. நாய்கள் குரைக்கட்டும். அதற்கு கல்லெறியப்போனால் எனது பயணமே தடைப்படும். எனவே, நாய்கள் குரைக்கட்டும். நான் முன்னோக்கிப் பயணிப்பேன். (இ)

---



# சுகாதார பணிப்பாளர் பதவி விலக வேண்டும்

## மக்கள் உரிமையை பாதுகாக்கும் இயக்கம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 14

“சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு அசேல குணவர்த்தன பொருத்தமற்றவர். எனவே, அப்பதவியில் இருந்து அவர் உடன் விலக வேண்டும்.”

- இவ்வாறு மக்கள் உரிமையைப் பாதுகாக்கும் இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்கப் பிரமுகர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளமைக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே மேற்படி அமைப்பின் உறுப்பினர் பத்ம தேரர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொலிஸார், கூலிப்படை போல் செயற்படுகின்றனர். நாட்டு மக்களைப் பயங்கரவாதிகளாகக் கருதி அவர்களை ஒடுக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலைமை நீடித்தால் சர்வதேச மட்டத்தில் எமது நாடு அபகீர்த்திக்குள்ளாகும். இந்நிலைமைக்கு வழிசமைத்து கொடுப்பது யார்?

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் யாரின் தேவையைப் பூர்த்தி செய்கின்றார்? அப்பதவிக்கு அவர் பொருத்தமற்றவர். எனவே, கௌரவமாகப் பதவி விலகுமாறு வலியுறுத்துகின்றோம்” - என்றார்.

கொரோனா வைரஸ் பரவும் அபாயமிருப்பதால் போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குத் தடைவிதித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பணிப்புரையொன்றை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

---

# ஜோசப்பின் கைதுக்கு எதிராக ஐ.நாவிடம் மகஜர் கையளிப்பு

கொழும்பு, ஜூலை 14

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியிடம் ஆசிரியர் சங்கம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

கொழும்பில் ஆசிரியர் சங்கம் சார்பில் மேற்கொண்ட ஜனநாயகப் போராட்டத்தின் போது ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர்களைத் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் பொலிஸார் முல்லைத்தீவு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தியுள்ளனர்.

இதனைக் கண்டித்தே இலங்கை ஆசிரிய சங்கத் தலைவர் உள்ளிட்டவர்களால் நேற்றுமுன்தினம் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. மகஜரை நேரில் கையளிப்பதற்காக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ, உப தலைவர் எம்.எம்.சமீன் மற்றும் மத்திய குழு உறுப்பினர் எம்.எம்.எம். லுத்பி உள்ளிட்டவர்கள் சென்றிருந்தனர்.



---

# ‘அடக்குமுறை’ எனும் ஆயுதத்தை கையிலேந்தி சட்டத்துக்கு புறம்பாகப் பயணிக்க அரசு முயற்சி

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 14

“எல்லா வழிகளிலும் தோல்வி கண்டுள்ள இந்த அரசு, தற்போது அடக்குமுறை எனும் ஆயுதத்தைக் கையிலேந்தி சட்டத்துக்குப் புறம்பாகப் பயணிக்க முற்படுகின்றது. இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.”

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார குற்றஞ்சாட்டினார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு பலவந்தமாகத் தனிமைப்படுத்தலுக்கு



உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இந்த அரசு ‘பெயில்’ என ஆரம்பத்திலேயே சுட்டிக்காட்டினோம். தற்போது எல்லா வழிகளிலும் ‘பெயில்’ என்பது உறுதியாகியுள்ளது. அதனால்தான் அடக்குமுறை வழி கையாளப்படுகின்றது. அதுமட்டுமல்ல சட்டத்தையும் கையில் எடுத்துச் செயற்படுகின்றது. இதன் ஓர் அங்கமாகவே போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு பலவந்தமாகத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்” - என்றார். (இ)

---

# நேற்று இரண்டாம் நாளாகவும் தொடர்ந்தது ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை



கொழும்பு, ஜூலை 14

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ‘இணைய வழி’ கற்பித்தலில் இருந்து விலகி முன்னெடுத்துள்ள தொழிற்சங்க நடவடிக்கை நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ள போதிலும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்கள் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்காக அழைத்துச் செல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்தும் நேற்றுமுன்தினம் காலை இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

தமது கோரிக்கைகளுக்கு கல்வி அமைச்சு இதுவரையில் எவ்வித பதிலையும் வழங்கவில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார். (இ)

# மிகப்பெரிய சூரிய புயல் பூமியை இன்று தாக்கலாம்!

நியூயோர்க், ஜூலை 14

இன்று பூமியைத் தாக்கவுள்ள மிகப்பெரிய சூரிய புயலால் ஜி.பி.எஸ், அலைபேசி சமிக்ஞைகள் பாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூரியனில் வீசும் புயலால் பூமியின் தொலைத்தொடர்பு பாதிக்கப்பட வாய்ப்பு என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இன்று புதன்கிழமை ஒரு சூரிய புயல் பூமியை நோக்கி வரும் என்றும் இது பூமியின் காந்தப்புலத்தை தாக்கும் எனவும் நாசா விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

மிகப்பெரிய சூரியப் புயல் பூமியின் மேல் வளிமண்டலத்தில் இயங்கும் செயற்கை கோள்களைத் தாக்கும், இது ஜி.பி.எஸ், அலைபேசி சமிக்ஞைகளைப் பாதிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்த சூரியப் புயல் உலகின் சில பகுதிகளில் மின் அமைப்புகளையும் பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. வலுவான காற்று பூமியின் காந்த மண்டலத்தில் புவி காந்த புயலைத் தூண்டலாம் என்றும் நிபுணர்கள் அச்சம் தெரிவித்தனர்.

# இரு வேறு தடுப்பூசிகள் ஆபத்தை ஏற்படுத்தலாம்!

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை!

ஜெனிவா, ஜூலை 14

கொரோனா தொற்றை தடுக்க இரு வெவ்வேறு நிறுவன தடுப்பூசிகளை போட்டுக்கொள்ளலாம் என்று பரிந்துரை செய்வது ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

இந்த விடயம் குறித்து உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைமை விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன் கூறுகையில்,

பல நாடுகளில் கொரோனா இரண்டாவது அலை இன்னமும் முடிவுக்கு வரவில்லை. மூன்றாவது அலை குறித்த எச்சரிக்கையும் தொடர்ந்து விடுக்கப்பட்டு வருகிறது. கொரோனா பரவலில் இருந்து காத்துக்கொள்ள தடுப்பூசி மட்டுமே ஆயுதம்.

இப்போதுள்ள நிலையில் கொரோனா தொற்றைத் தடுக்க இரு வேறு நிறுவனத்தின் ஊசிகளைப் போட்டுக்கொள்ளலாம் என்று பரிந்துரை செய்வது ஆபத்தை ஏற்படுத்தக்கூடும். இன்னும் உலக சுகாதார ஸ்தாபனம் இது குறித்து ஒரு முடிவுக்கு வரவில்லை.

இதுவரை ஆய்வுகள் முடிந்து நமக்கு விடை




கிடைக்கவில்லை. உரிய தரவுகளுடன் ஆய்வுகள் மேற்கொண்ட பிறகே இரு ஊசிகளை பயன்படுத்துவது பற்றி சிந்திக்க வேண்டும். கொரோனாவுக்காக இரு வேறு தடுப்பூசிகளை போட்டுக்கொள்ளலாம் என்று கூறுவது சரியான நடவடிக்கை அல்ல - என்றார்.

அண்மையில் இங்கிலாந்தில் நடந்த ஆய்வு ஒன்றில் இரு அஸ்ட்ரா செனகா தடுப்பூசிகளை பெற்றவர்கள் மூன்றாவதாக வேறு ஒரு நிறுவனத்தின் தடுப் பூசியை பெறுவது சிறப்பாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தென்னாபிரிக்காவில் தொடரும் வன்முறைகளில் 10 பேர் மரணம்!




ஜொகன்னஸ்பேர்க், ஜூலை 14

தென்னாபிரிக்காவில் முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவாக நடக்கும் வன்முறைகளில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர்.

தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் ஷூமாவுக்கு ஊழல் குற்றங்களுக்காக 15 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதையடுத்து கடந்த வாரம் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாட்டில் கடந்த புதன்கிழமை போராட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த போராட்டங்கள் வன்முறையாக மாறின.

இதைத் தொடர்ந்து வர்த்தக நிலையங்கள் பல சூறையாடப்பட்டன. வாகனங்கள் பலவற்றுக்கும் தீ வைக்கப்பட்டது. இந்தக் கலவரங்களில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர்.

இதைத் தொடர்ந்து வன்முறை நடக்கும் பகுதிகளில் இராணுவம் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# சீன கம்யூனிஸ்டில் இணைய நடிகர் ஜக்கி சான் விருப்பம்!

பீஜிங், ஜூலை 14

பிரபல நடிகர் ஜக்கி சான் சீன கம்யூனிஸ்ட் கட்சியில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

பிரபல நடிகரான ஜக்கி சான் (வயது 67) அதிரடி சண்டைக் காட்சிகளால் உலகப் பிரபலம் பெற்றவர். அவர் ஹொங்கொங்கில் வசித்து வருகிறார்.

சீனாவின் தேசி பாதுகாப்பு சட்டத்தை ஹொங்கொங் மக்களில் பெரும்பங்கினர் எதிர்த்த நிலையில், சீனாவுக்கு ஆதரவாக ஜக்கி சான் கருத்து வெளியிட்டிருந்தார். இதனால், பெரிதும் விமர்சிக்கப்பட்டார்.

இந்த நிலையில், பீஜிங்கில் நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், "கடந்த சில ஆண்டுகளில் சீனா மிக வேகமாக முன்னேறி வருகிறது. இதை பல நாடுகளுக்கு செல்



லும்போது நேரடியாக உணர்ந்துள்ளேன். சீன குடிமகனாக இருப்பதில் பெருமை அடைகிறேன்.

"ஐந்து நட்சத்திரங்களை உடைய நம் சிவப்பு கொடிக்கு, உலகம் முழுதும் மரியாதை உள்ளது. கொடுத்த வாக்குறுதிகளை சீன கம்யூனிஸ்ட் கட்சி மிக குறைந்த காலத்திலேயே நிறைவேற்றி வருகிறது. எனவே, அந்தக் கட்சியில் உறுப்பினராக இணைய ஆர்வமாக இருக்கிறேன்.", என்றார்.

# உலகில் 300 கோடி மக்களுக்கு ஆரோக்கியமான உணவில்லை!

நியூயோர்க், ஜூலை 14

கொரோனாவால் உணவுப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. இதனால் ஆரோக்கியமான உணவை மக்கள் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது.

ஆனால், 2017ஆம் ஆண்டு, உலக மக்கள் தொகையில் 40 சதவீதம்பேர் - 300 கோடி மக் கள் தரம் குறைந்த உணவுப் பொருள்களை உண்ணும் நிலைக்கு தள்ளப்பட்டனர் என்று ஆய்வு ஒன்று கூறுகின்றது.

இதற்கு உணவுப் பொருட்களின் விலை உயர்வும், குறைந்த வருமானமுமே காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கியூபாவில் அரசுக்கு எதிராக முதன்முறையாக ஆர்ப்பாட்டம்!

ஹவானா, ஜூலை 14

கியூபாவில் உணவுப் பற்றாக்குறை, அத்தியாவசியப் பொருள்கள் விலை உயர்வைக் கண்டித்து அந்நாட்டு அரசுக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தலைநகர் ஹவானாவில் நூற்றுக்கணக்கானவர்கள் பேரணியாக சென்றனர்.

1959இல் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி அமைந்த பிறகு அந்நாட்டின் வரலாற்றில் அரசுக்கு எதிராக மக்கள் நிகழ்த்தும் மிகப்பெரிய போராட்டம் இதுவாகும். இந்தப் போராட்டத்துக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது.

கொரோனா பரவல் பிரச்னை காரணமாக, கியூபாவில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு, அத்தியாவசிய பொருள்களின் விலை வெகுவாக அதிகரித்துள்ளது. இதனைக் கண்டித்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை போராட்டம் நடைபெற்றது. இதில் ஏராளமான இளைஞர்கள் பங்கேற்றனர். தலைநகரில் பெரிய அளவிலான பேரணி நடைபெற்றதால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. சில இடங்களில் பொலிஸார் மீது கல்வீச்சு சம்பவங்களும் நிகழ்ந்தன.



இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து அரசாங்கம் இணைய சேவையை முடக்கியுள்ளது. போராட்ட களத்திலிருந்து 20இற்கும் மேற்பட்ட சர்வதேச பத்திரிகையாளர்களும் பொலிஸாரால் அகற்றப்பட்டனர்.

இதேவேளை, இந்தப் போராட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் - அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்தும் இன்னொரு சாரார் போராட்டங்களை நடத்தினர். (ஐ)

# ஈராக் மருத்துவமனையில் தீ: 52 பேர் மரணம்; 22 பேர் காயம்!

பஹ்தாத், ஜூலை 14

ஈராக்கில் உள்ள மருத்துவமனையில் கொரோனா விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 52 பேர் உயிரிழந்தனர். 22 பேர் காயமடைந்தனர்.

ஈராக்கின் தெற்கு நகரமான நஸிரியாத்தில் உள்ள மருத்துவமனையிலேயே இந்த துயர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒட்சிசன் சிலண்டர் வெடித்து சிதறியதை அடுத்து இந்தத் தீ விபத்து இடம்பெற்றது. வேகமாக பரவிய தீ விடுதி முழுவதும் பரவியது.

தீயணைப்பு படையினர் விரைந்து செயல்பட்டு தீயை கட்டுக்குள் கொண்டுவந்த போதும் 52 பேர் பலியாகினர். 22 பேர் காயமடைந்தனர்.

எனினும், சிலர் காணாமல் போயுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இதனால், மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று கூறப்படுகின்றது.

ஈராக்கில் மருத்துவமனையில் இடம்பெற்ற இரண்டாவது தீ விபத்து சம்பவம் இதுவாகும். இந்த விபத்தைத் தொடர்ந்து மருத்துவமனை முன்பாக மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



# ஆஸிக்கு எதிரான இருபது- 20: தொடர் மேற்கிந்தியா வசம்!

குரோஸ் ஐலட், ஜூலை 14

அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான மூன்றாவது இருபது - 20 போட்டியை 6 விக்கெட்களால் வெற்றி கொண்டது மேற்கிந்தியத் தீவுகள் அணி. இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடர் 3 - 0 என்ற கணக்கில் மேற்கிந்தியா வசமானது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் பங்கேற்கிறது.

முதல் இரு போட்டிகளிலும் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்ற நிலையில், தொடர் வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது போட்டியில் நேற்று களமிறங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

மத்தியூ வேட், அரோன் பின்ஞ் இணை தொடக்கம் கொடுத்தனர். 4 பந்துகளை பௌண்ட்ரிக்கு விரட்டிய வேட் 16 பந்துகளில் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மிற்செல் மார்ஸ் தடுத்தாட பின்ஞ் 30 ஓட்டங்களுடன் வோல்ஸின் பந்தில் அலெனிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

மார்ஸ் 9, அலெக்ஸ் காரே 13, ஹென்றிக்யூ 33, அஸ்ரன் ரேர்ணர் 24 என்று ஆட்டமிழக்க 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 141 ஓட்டங்களைப் பெற்றது அவுஸ்திரேலிய அணி.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சில் ஹைடன் வோல்ஸ் 2 விக்கெட்களையும், மக்கோய், டுவைன் பிராவோ, அலென் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகளுக்கு தொடக்க வீரர்கள் சொதப்பினர். பிளெட்சர் 4, சிம்மன்ஸ் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த கிறிஸ் கெயில், நிக்கோல்ஸ் பூரண் ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். கிறிஸ்கெயில் தனது வழக்கமான அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைச் சதம் கடந்து அசத்தினார். அவர், 38 பந்துகளில் 7 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 67 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார்.

14.5 ஓவர்களில் 4 விக்கெட்களை மட்டுமே இழந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 142 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது.



நிக்கோல்ஸ் பூரண் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 32 ஓட்டங்களையும் ரஸல் 7 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சில் மெரிடித் 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக கிறிஸ்கெயில் தெரிவானார். (ஐ)



இங்கிலாந்து ஓட்டபந்தயம்

## இலங்கையை சேர்ந்த கீரனுக்கு தங்க பதக்கம்!

மன்செஸ்டர், ஜூலை 14

இங்கிலாந்து பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான சம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் கீரன் சிறீஸ் கந்தராஜா முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் பெற்றார். இவர் இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவராவார்.

மான்செஸ்டர் நகர மைதானத்தில் ஞாயிறு 11 ஆம் திததியன்று இடம்பெற்ற மேற்படி ஓட்டப் பந்தயத்தில் 800 மீற்றர் தூரத்தை 2:01:17 நிமிடங்களில் ஓடி சாதனை படைத்தார்.

இவர் 15 வயதுக்குட்பட்டவர்களில் ஐக்கிய இராச்சியத்தில் இரண்டாவது வேகமானவராக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 220 ஓட்டங்களால் சிம்பாவே பங்களாதேஷிடம் வீழ்ந்தது!

ஹராரே, ஜூலை 14

சிம்பாவே அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், 220 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி அபார வெற்றிபெற்றது.

சிம்பாவேயின் தலைநகர் ஹராரேயில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் 192 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸை ஆடிய பங்களாதேஷ் ஒரு விக்கெட் இழப்புக்கு 284 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பங்காளதேஷ் அணி சார்பில் ஷத்மான் இஸ்லாம் (115 ஓட்டங்கள்), நஜ்முல் ஹூசைன் சான்டோ (117 ஓட்டங்கள்) ஆகியோர் சதம் அடித்தனர்.

இதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 477 ஓட்டங்கள் இலக்கை நோக்கி 2ஆவது இனிங்ஸில் ஆடிய சிம்பாவே அணி 4ஆம் நாள் முடிவில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 140 ஓட்டங்களை எடுத்திருந்தது. அந்த அணியின் சார்பில் அதிகபட்சமாக பிரண்டென் ரெய்லர் 92 ஓட்டங்களை எடுத்தார்.

இந்த நிலையில், கடைசி நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பங்களாதேஷ் அணியை விட 337 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் களமிறங்கியது சிம்பாவே. அந்த அணியின் டொனால்ட் டிரிபனோ மட்டும் ஓரளவு தாக்குப்பிடித்து அரை சதமடித்து 52 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

கடைசி கட்டத்தில் முசாராபானி 30 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இறுதியில், சிம்பாவே அணி 256 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதன்மூலம் சிம்பாவேக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பங்காளதேஷ் 220 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் சார்பில் மெஹதி ஹசன், தஸ்கின் அகமது ஆகியோர் தலா 4 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினர். (ஐ)

## கிறிஸ்கெயில் 14,000 ஓட்டங்கள்!

குரோஸ் ஐலட், ஜூலை 14

இருபது - 20 போட்டியில் 14 ஆயிரம் ஓட்டங்களை எடுத்த முதல் வீரர் என்ற சாதனையை மேற்கிந்தியத் தீவுகளின் அதிரடி வீரர் கிறிஸ் கெயில் படைத்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது இருபது - 20 போட்டியில் கெயில் 67 ஓட்டங்களை குவித்தார். ஆனால், அவர் 29 ஓட்டங்களைப் பெற்றபோது 14 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை கெயில் கடந்தார்.

கிறிஸ் கெயில், 431 இருபது -20 போட்டிகளில், 14,038 ஓட்டங்களை எடுத்துள்ளார். இவருக்கு அடுத்த இடத்தில் பொலார்ட் 545 போட்டிகளில் 10,836 ஓட்டங்களுடன் உள்ளார்.

## இந்திய கிரிக்கெட் வீரர் யஷ்பால் காலமானார்!

புதுடில்லி, ஜூலை 14

1983 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்திய அணிக்காக விளையாடிய யாஷ்பால் சர்மா மாரடைப்பால் நேற்று காலமானார்.

பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் பிறந்த அவர், கடந்த 1983ஆம் ஆண்டு நடந்த உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாக விளையாடி இந்திய அணி கிண்ணம் வெல்ல முக்கிய பங்காற்றினார். உலகக் கிண்ணத் தொடரில் 2 அரைசதங்கள் அடித்துள்ளார்.

அந்த தொடரின் முதல் ஆட்டத்தில், பலம் வாய்ந்த மேற்கிந்திய தீவுகள் அணியை இந்தியா வீழ்த்தியது. இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய யாஷ்பால் சர்மா 89 ஓட்டங்களை குவித்தார். இதேபோல், அந்த தொடரில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி லீக் ஆட்டத்தில் 40 ஓட்டங்கள் (40 பந்துகள்), அரையிறுதியில் 61 ஓட் டங்கள் (115 பந்துகள்) எடுத்து அணியின் வெற்றிக்கு பெரிதும் உத வினார். ஓய்வு பெற்ற பின் இந்திய கிரிக்கெட் சபை, பஞ்சாப் மற்றும் அரி யானா கிரிக்கெட் சபை களிலும் முக்கிய பொறுப் புகளையும் வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





## ஒலிம்பிக் போட்டி: பியான்கா விலகல்!

றொறன்ரோ, ஜூலை 14

கொரோனா அச்சுறுத்தலால் ரோக்கியோ ஒலிம்பிக் போட்டியிலிருந்து பிரபல ரென்னிஸ் வீராங்கனையான பியான்கா அன்ட்ரிஸ்கு விலகினார்.

ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகிறது. ரோக்கியோவில் நடக்கும் இந்தப் போட்டிக்காக உலக தடகள வீரர்கள் பலரும் தயாராகி வருகின்றனர்.

இந்த நிலையிலேயே கனடா நாட்டு வீராங்கனையான பியான்கா ஒலிம்பி தொடரிலிருந்து விலகும் அறிவிப்பை வெளியிட்டார்.

இது குறித்து பியான்கான தனது சமூகவலைதளத்தில், "இந்த கோடையில் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்காதது "மிகவும் கடினமான" முடிவு. நான் சிறுமியாக இருந்தபோதே ஒலிம்பிக்கில் கனடாவை பிரதிநிதித்துவப்படுத்துவது என் கனவாக இருந்தது. ஆனால், தொற்றுநோயுடன் தொடர்புடைய அனைத்து சவால்கலும், என் இதயத்தில் ஆழமாக இருப்பதை நான் அறிவேன், இது எனக்கு நானே எடுக்கும் சரியான முடிவு. எதிர்காலத்தில் சம்பியன் போட்டிகளில் கனடாவை பிரதிநிதித்துவப்படுத்தவும், பாரிஸில் நடைபெறும் 2024 ஒலிம்பிக்கில் போட்டியிடுவதையும் நான் எதிர்நோக்கி உள்ளேன்", என்று பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, பிரபல ரென்னிஸ் வீரர் ரபேல் நடால் செரீனா வில்லியம்ஸ் ஆகியோரும் ஒலிம்பிக் போட்டியிலிருந்து விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# துமிந்த விரைவில் அரசியல் களத்தில்

கொழும்பு, ஜூலை 14
ஜனாதிபதி பொதுமன்னிப் பின் கீழ் விடுதலை செய்யப்பட் டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, குறுகிய ஓய்வு காலத்தின் பின்னர் மீண்டும் செயல்பாட்டு அரசியல் நடவடிக்கையில் இறங்குவார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பாரத லக்ஸ்மன் பிரேமச் சந்திர கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் துமிந்த சில்வா வுக்கு மரணதண்டனை விதிக் கப்பட்டிருந்தது. எனினும், அவர் சிறைக்குச் சென்று சுமார் நான்கரை வருடங்களுக்குள் ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் கடந்த மாதம் 24 ஆம் திகதி விடுதலையானார்.


தனிமைப்படுத்தல் காலம் முடிவடைந்த பின்னர், சிறிது கால ஓய்வின் பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் அவர் சந்தித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக் கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஊடாகவே, சிறைக்குச் செல்ல முன்னர் துமிந்த சில்வா அரசி யல் செயற்பாட்டில் பங்கேற்றி ருந்தார். தற்போது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உள்ளது. எனவே, மொட்டு கட்சி ஊடா கவே அவரின் அரசியல் செயற் பாடு இடம்பெறும் என எதிர்ப் பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, மாகாண சபைத் தேர்தலொன்று நடை பெறும் பட்சத்தில் முக்கிய பதவியில் துமிந்த சில்வா போட்டியிடக்கூடும் எனவும் சில சிங்கள இணையத்தங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ)

# மேலும் 6 பேருக்கு டெல்டா இதுவரை 24 பேர் பாதிப்பு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 14
இலங்கையில் மேலும் 6 பேருக்கு டெல்டா கொரோனா பிறழ்வு தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் இது வரை 24 டெல்டா நோயாளர் கள் அடையாளம் காணப்பட் டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவ தற்கு பொதுமக்கள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், நாட்டில் டெல்டா கொரோனா வைரஸ் பிறழ்வு பரவியுள்ளமை தொடர்பில் ஆராய்வதற்காக மற்று மொரு ஆய்வு முன்னெடுக்கப் பட்டுள்ளது என ஸ்ரீ ஜெயவர்த் தனபுர பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட கொரோனா நோயாளிகளின் 96 உயிரி மாதிரிகளை கொண்டு இந்த ஆய்வு ஆரம் பிக்கப்பட்டுள்ளது என ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நீர்பீடணம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித் துள்ளார்.

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இந்த மாதிரிகள் எழு மாறாகப் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளன.

இந்த ஆய்வுகளின் முடிவுகளை இன்னும் ஒரு வாரத்தில் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக சந்திம ஜீவந்தர மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

## தொற்றிலிருந்து மேலும் 1,328 பேர் குணமடைவு

கொழும்பு, ஜூலை 14.
நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப் பட்ட மேலும் 1,328 பேர் குண மடைந்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 47 ஆயிரத்து 569 ஆக அதிகரித் துள்ளது. (இ)

## அதிகூடிய தடுப்பூசிகள் ஏற்றிய நாள்

கொழும்பு, ஜூலை 14
நாட்டில் நேற்றுமுன்தினம் (12) திங்கட்கிழமை அதிகூடிய கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்பட்ட நாளாகப் பதி வாகியுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பகுதியின் அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி 2 இலட்சத்து 32 ஆயிரத்து 526 கொரோனா தடுப்பூசிகள் நேற்று முன்தினம் ஏற்றப்பட்டுள்ளன. இது, இலங்கையில் நாளொன் றில் ஏற்றப்பட்ட அதிகூடிய தடுப்பூசிகளாகும் என்பது குறிப் பிடத்தக்கது. (இ)

# வெவ்வேறு இடங்களில் ஹெரோய்னுடன் பெண்ணொருவர் உள்ளிட்ட 11 பேர் கைது

கொழும்பு, ஜூலை 14
நாட்டின் பல பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் மேற்கொள் ளப்பட்ட விசேட சுற்றி வளைப் புகளில் பெண்ணொருவர் உள் ளிட்ட 11 பேர் ஹெரோய்ன் போதைப்பொருடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது.

தலங்கம பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மாலபே பிரதேசத் தில் தலங்கம பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது, 10 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோய்னுடன் பெண்ணொ ருவர் கைதுசெய்யப்பட்டுள் ளார்.

அனுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்னாயக்கபுர பிரதேசத்தில் அனுராதபுரம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசேட சுற்றி வளைப்பில் 13 கிராம் 590 மில்லிகிராம் ஹெரோய்னுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள் ளனர். பூகொட மற்றும் கிரிபத் கொட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 34,39 வயதுடைய இரு வரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

மிஹிஜய சேவன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சத்ஹிரு உயன பிரதேசத்தில் மிஹிஜய பொலி ஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில் 9 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள் ளார். கொழும்பு 14 பிரதேசத் தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளார்.

இதேவேளை, மிஹிஜய ரந்திய உயன பிரதேசத்தில் மிஹிஜய சேவன பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 8 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். முகத்துவாரம் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட் டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்பிகொட்டுவ பிரதேசத்தில் கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள் ளார். கிராண்டபாஸ் பிரதேசத் தைச் சேர்ந்த 49 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளார்.

பொரளை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மெத்சர உயன பிர தேசத்தில் பொரளை பொலி ஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் 4 கிராம் 670 மில்லி கிராம் ஹெரோய்னுடன் ஒரு வர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும், கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லிகா ராமா வீதிக்கு அருகில் கல்கிஸை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில் 4 கிராம் 620 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இரத்ம லான பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, தலங்கம, மன்னார் உள்ளிட்ட மேலும் மூன்று பிரதேசங்களில் 13 கிராம் 130 மில்லிகிராம் ஹெரோய்னுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 39, 26, 29 வயதுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட் டுள்ளனர். (இ)

# மரண அறிவித்தல்



மலர்வு 24 - 02 - 1973
உதிர்வு 11 - 07 - 2021

**சின்னையா மணிவண்ணன்**
பொலிகண்டி கிழக்கு - கொழும்பு

யாழ். பொலிகண்டி கிழக்கு, தம்பலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மணிவண்ணன் கடந்த 11-07-2021 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னையா (ஓய்வுபெற்ற பிரதம இலிகிதர், பிரதேச செயலகம், பருத்தித்துறை) - செல்வமலர் தம்பதிகளின் அன்பு மகனும், கௌரி அவர்களின் அன்புக் கணவரும், இன்பமலர் (ஆசிரியை - யா/வல்வை சிவகுரு), மதிவதனி (சுவிஸ்), சிவச்செல்வி (விரிவுரையாளர்- வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் கல்லூரி, இரத்மலானை), மயூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சிறிகுமரபரன் (ஆசிரியர்- யா/கொற்றாவத்தை அ.மி. த.க பாடசாலை), பகீரதன்(சுவிஸ்), உருத்திரன் (விரிவுரையாளர் - வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் கல்லூரி), தாரணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கிருத்திகா (HNB Head Office), செந்தூரன், நவீனன் (சுவிஸ்), மதீனன் (சுவிஸ்), சங்கவி, ஸ்ரீராம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,மதுவந்தி (லண்டன்) அவர்களின் அன்புப் பெரியப்பாவும், காலஞ்சென்ற கந்தசாமி, இராசமலர், ரூபசௌந்தரி ஆகியோரின் பெறாமக னும், காலஞ்சென்ற செல்லம், குலேந்திரராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (14.07.2021) புதன்கிழமை அன்று மு.ப 10 மணிமுதல் மு.ப 11 மணி வரை பொலிகண்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு :
**மயூரன் (சகோதரன்) - 00447490187108**
**கலா (சகோதரி) - 0776717393**
**சிவச்செல்வி (சகோதரி) - 0714910462**
**மதிவதனி (சகோதரி) - 0041789564959**
**பகீரதன் (மைத்துனர்) - 0041789562969**
**குரு (மைத்துனர்) - 0774065556**
**கண்ணன் (மைத்துனர்) - 0716019762**

## ஆழமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இணைந்து செயற்படுவதில் எந்தப் பிரச்னையும் இருக்காது" எனவும் நேற்று மாலை அவர் வெளியிட்ட ருவிட் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருவரும் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாக தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மனித உரிமைகள் மற்றும் அரசியல் அமைப்பு தொடர்பான வழக்கறிஞர் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தால் ஏப்ரல் 14, 2020 அன்று கைது செய்யப்பட்டார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலாலிகளுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இவர் மீது, தற்போது பயங்கரவாத தடுப்பு சட்டம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சட்டங்களுக்கு அமைய பேச்சு தொடர்புடைய குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

மே 16, 2020 அன்று பொலிஸ் பயங்கரவாத எதிர்ப்பு விசாரணை பிரிவால் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கவிஞரும் ஆசிரியருமான அஹ்னப் ஜஸீம் என்பவர் கைது செய்யப்பட்டார். ஜஸீமினுடைய கைதிற்கான குற்றச்சாட்டு இவருடைய நூலான 'நவரசம்' இனவாதத்தை தூண்டும் கருத்துக்களை உள்ளடக்கியது என்பதுடன் மாணவர்கள் மத்தியில் இனவாத கருத்துக்களை போதித்தார் என்பதாகும். இந்தக் கைதுக்கு தவறான சிங்கள, ஆங்கில மொழிபெயர்ப்பே காரணமாகும்.

ஹிஸ்புல்லாவின் கைதும் தொடர்ச்சியான தடுப்புக்காவலும் சட்டத்தரணிகளின் உரிமைகளுக்கும் சட்ட ஆட்சிக்கும் எதிரான தாக்குதலாகும். அவ்வாறே, ஜஸீமினுடைய கைதானது ஒருவரின் தனிப்பட்ட கருத்து சுதந்திரம் மற்றும் பன்மைத்துவம் மீதான ஒரு தாக்குதல் என்பதுடன் எண்ணங்களின் மீதான ஒரு பரந்த போர் என்பதனை தெளிவாகப் புலப்படுத்துகிறது.

இரண்டு வழக்குகளினதும் போக்கைப் பார்க்கும்போது தெளிவாக புலப்படுவது யாதெனில் ஹிஸ்புல்லா மற்றும் அஹ்னப் ஆகியோரின் உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பதே.

நியாயமின்மை, பெரும்பான்மை அரசியல், இனவாதம் போன்றவை ஏற்படுத்திய அழிவுகள் மூலம் கற்றுக்கொண்டவை அடிப்படையாக வைத்தும் நாளாந்தம் எமது சமூகத்தின் ஒரு பகுதியினர் அச்சத்துடனும் பாதுகாப்பின்மையுடனும் வாழ்வதை வைத்தும் நாம் அனைவரும் இவ் தாக்குதல்களுக்கு எதிராக செயல்பட வேண்டும். தீங்கான செயல்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுவது அனைவர் மீதும் நிச்சயமாக பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என நாங்கள் நம்புகிறோம். நாங்கள் முன்வைப்பது யாதெனில் ஹிஸ்புல்லா மற்றும் ஜஸீம் ஆகியோர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

மேலும், குற்றவியல் நீதி முறைமையின் சீரழிவு மற்றும் அரச துறையின் வீழ்ச்சி சமூகத்தின் அடிப்படையான ஜனநாயகத் தளங்களை சீர்குலைக்கிறது என்ற ஆழ்ந்த கவலை எங்களுக்குண்டு. ஆகவே, நாங்கள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் ஜனநாயகவிரோத செயல்பாடுகளை நிறுத்தவும் - ஜனநாயகத்துக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்ட பயங்கரவாத தடுப்புச் சட்டம் மற்றும் அதுபோன்ற ஏனைய சட்டங்களை இரத்து செய்யுமாறு கோருகிறோம்.

இறுதியாக எமது கல்விச் சுதந்திரத்தை பயன்படுத்தி இப்போராட்டத்தை விரிவு படுத்துவதன் மூலம் அனைவர் சார்பிலும் ஜனநாயகத்தையும் நீதியையும் நிலைநாட்டுவதற்கு அனைத்து கல்வி சார் சமூகத்திற்கும் அழைப்பு விடுக்கிறோம்", என்றுள்ளது.

# கொரவலப்பிட்டி மின்னுற்பத்தி நிலையத்தின் 40 வீதத்தை அமெரிக்காவுக்கு விற்கத் தீர்மானம்

## ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க

கொழும்பு, ஜுலை 14

கெரவலப்பிட்டி மின்னுற்பத்தி நிலையத்தில் அரசுக்கு சொந்தமான 40 வீதமான பகுதியை அமெரிக்க நிறுவன மொன்றுக்கு விற்பனை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறதாக ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பிற்கும், பொருளாதாரத்திற்கும் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய அமைச்சரவை பத்திரத்திற்கு கடந்த திங்கட்கிழமை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அவர் நேற்றுத் தெரிவித்தார்.

நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல, அமெரிக்க நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதாகவும் கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி நிலையத்தின் குழாய் கட்டமைப்பு, அதற்கான வாயு விநியோகம், களஞ்சிய சாலை தொகுதி ஆகியவற்றை முழுமையாக ஐக்கிய அமெரிக்காவின் நிறுவன மொன்றிடம் கையளிப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அநுரகுமார திசாநாயக்க கூறினார்.

"எரிசக்தி வளத்தை கைப்பற்றுவோரே எதிர்காலத்தில் எமது நாட்டை ஆள முடியும். இந்நிலையில், திறைசேரி உள்ளிட்ட நான்கு அரச நிறுவனங்களுக்கு உட்பட்ட கெரவலப்பிட்டி மின்னுற்பத்தி நிலையத்தின் 40 வீதத்தை அமெரிக்க நிறுவனத்திற்கு கையளிக்க அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இந்த மின்னுற்பத்தி நிலையத்தை அண்மித்து 300 மெகாவாட் டுபே மின்னுற்பத்தியை மேற்கொள்வதற்கான நிலையம் நிர்மாணிக்கப்படுகிறது. 2025 ஆம் ஆண்டளவில் இங்கு 1000 மெகாவாட் மின்னுற்பத்தியை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது" எனவும் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

## 1404 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
569 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 367 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தடுப்பூசி வழங்கலில் சீரானதொரு செயல்திட்டத்தைப் பின்பற்றுவதற்கும் நாட்டின் அனைத்து மக்களும் தடுப்பூசியை பெறுவதற்கான கட்டமைப்பை நிறுவுவதற்கும் அவசியமான உதவிகளையும் ஜப்பான் வழங்கவுள்ளது.

இதன்படி தடுப்பூசிகளை களஞ்சியப்படுத்த அவசியமான குளிரூட்டி பெட்டிகளும் ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்குத் தடுப்பூசிகளை ஏற்றிச்செல்வதற்கான தாங்கிகளும் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன.

இந்த உதவி மூலம் இலங்கையில் தடுப்பூசி வழங்கல் செயல்திட்டம் விரைவுபடுத்தப்படும் அதேவேளை, கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படும் என்றும் எதிர்பார்ப்பதாக ஜப்பான் தூதரகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எரிபொருள் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுப்பார். சந்தர்ப்பம் வரும்போது அவர் நல்ல பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பார்.

நாட்டின் ஜனாதிபதிப் பதவிக்கும் பஸில் ராஜபக்ஷ தகுதியானவர். அவர் நாட்டின் பொருளாதரத்தை சரியாகக் கையாண்டு இலங்கையை அபிவிருத்தியின் பக்கம் கொண்டு சென்றவர் என்பதால் அவர் மீது எமக்கு அதீத நம்பிக்கை உள்ளது.

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் கட்சிக்குள் கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்படுகின்றது. அத்துடன் அரச பங்காளிக் கட்சிகளுடனும் இது குறித்து கலந்துரையாடத் தீர்மானித்துள்ளோம்.

உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்தால் இறுதியாக ஜனாதிபதி, பிரதமர் இருவரும் தவறிழைத்தனர் என்று தவறான கருத்து பரப்பப்படலாம்.

இதனால் எதிர்க்கட்சியினரின் இத்தகைய முயற்சிகளுக்கு நாம் இடமளிக்கமாட்டோம்" - என்றார். (இ)

# 15 வயது சிறுமி விவகாரம்: இதுவரை 41 பேர் சிக்கினர்

கொழும்பு, ஜுலை 14

15 வயதான சிறுமி ஒருவர், இணையத்தளம் ஊடாக விற்பனை செய்யப்பட்டு பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய சம்பவம் தொடர்பில் இதுவரை 41 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் ஏழு பொலிஸ் பிரிவுகளில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஜுன் 7ஆம் திகதி கல்கிஸை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவல் பிரகாரம் 15 வயதான சிறுமியை இணையத்தில் விற்பனை செய்தமை தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

இதனையடுத்தே இந்த விவகார விசாரணைகள் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்னவின் உத்தரவில் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பான மேலதிக விசாரணைகள் சிரேஷ்ட பெண் பொலிஸ் அத்தியட்சகர் தர்ஷிகா குமாரியின் நேரடிக் கட்டுப்பாட்டில், அவரது ஆலோசனைக்கு அமைய சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் மனோஜ் சமரநாயக்கவின் கீழ் அதன் விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர் சமந்தி ரேணுகா தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்விசாரணைகளுக்கு சி.ஐ.டியின் டிஜிட்டல் பகுப்பாய்வு பிரிவு ஊடாக விசாரணைக்கு அவசியமான உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட சிறுமி தொடர்ந்தும் வைத்தியசாலையில் வைத்தியர்களின் கண்காணிப்பில் உடலியல் மற்றும் மான சீக சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், குறித்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் மிஹிந்தலை பிரதேச சபையின் பிரதி தவிசாளர், இரத்தினக்கல் வியாபாரி, இலங்கை கடற்படையின் இருதய சத்திரசிகிச்சை விசேட நிபுணர், இரண்டு பொலிஸ் அதிகாரி, ஒரு பாடகர் என இதுவரை 41 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (இ)

## தொழிற்சங்க..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொழிற்சங்கத் தலைவர்கள் அறவழியில் போராட்டம் நடத்தினார்கள். அதற்கான ஜனநாயக உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டத்தைக் காரணம் காட்டி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஒடுக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டனர்.

நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் அவர்களுக்குப் பிணை கிடைத்தது. எனினும், பொலிஸார் பல வந்தமாகத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளனர். நாட்டில் பொலிஸ் அராஜகம் தொடர்கின்றது என்பதற்கு இந்தச் சம்பவமும் சான்று.

தொழிற்சங்கத் தலைவர்களின், உரிமைக்கான போராட்டத்தை ஒடுக்குவதானது ஜனநாயகத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளது.

அதேவேளை, மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் பெற்றுக்கொடுக்கப்பட்டு விட்டது எனக் கூறப்பட்டாலும், அது பூச்சாண்டி காட்டுவதற்கான நடவடிக்கையாகவே உள்ளது. வேலைச்சுமைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கு எதிரான கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. இதற்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

கொட்டியாகலை பகுதியில் தனிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை. அரச அதிபரிடம் வினவினால், நிதி வழங்கப்படவில்லை எனக் கூறுகின்றார்" - என்றார். (இ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 7 பேரும், யாழ். போதனா மருத்துவமனையில் 2 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேரும், புதுக்குடியிருப்பு மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும், முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் ஒருவரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

இதேபோல, மன்னார் பொது மருத்துவமனையில் மூவரும், கிளிநொச்சி பொது மருத்துவமனையில் இருவரும், வவுனியா பொது மருத்துவமனையில் ஒருவரும், வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருமாக வடக்கு மாகாணத்தில் நேற்று மொத்தம் 22 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதுதவிர, நேற்று யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி மருத்துவ அதிகாரி பிரிவில் 10 பேரும், மூதூர் மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும், இரணைமடு தனிமைப்படுத்தல் முகாமில் 13 பேரும், வசாவிளான் தனிமைப்படுத்தல் முகாமில் ஒருவரும் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# யாழில் கொரோனாவால் இதுவரை 107 பேர் மரணம்

## 6,015 பேர் தொற்றாளர்களாக அடையாளம்

**யாழ்ப்பாணம், ஜூலை 14**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 6 ஆயிரத்து 15 ஆக அதிகரித்துள்ளது என மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.**



அத்துடன் இம்மாவட்டத்தில் இதுவரை 107 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது 3 ஆயிரத்து 604 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 603 நபர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ - 03)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 224 பேர் கைது

*கொழும்பு, ஜூலை 14*

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 224 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 49 ஆயிரத்து 643 ஆக அதிகரித்துள்ளது.

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக செயற்படுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## மரண அறிவித்தல்



| உதிர்வு | உதிர்வு |
|---|---|
| 04 - 04 - 1941 | 11 - 07 - 2021 |

### மாணிக்கம் கனகலிங்கம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், சரவணை நீர்கொழும்பை வதிவிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் கனகலிங்கம் அவர்கள் கடந்த (11.07.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் – சௌந்தரநாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்துமணி, சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் றமேஸ் (பிரான்ஸ்), நரேஸ் (பிரான்ஸ்), பூமிகா (லண்டன்), வாகீஸ்(பிரான்ஸ்), குமுதினி (பிரான்ஸ்), விஜிதா (பிரான்ஸ்), யசிந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுடர்மதி, சமிதா, அரசராஜா, தர்சினி, ஸ்ரீஸ்கந்தராசா, நடேசபிள்ளை, ஜெயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், நல்லம்மா (இலங்கை), காலஞ்சென்றவர்களான மிதுலாவதி, தேவராசா மற்றும் புவனதாசன்(கனடா), ஸ்ரீஸ்கந்தராசா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம், சண்முகநாதன் மற்றும் சறோஜினி தேவி, மகேஸ்வரி, இராசமலர் ஆகியோரின் அன்பு மச்சானும், ஏகாம்பிகை(பிரான்ஸ்), கனகரட்ணம்(கனடா), காலஞ்சென்ற சோமசுந்தரம், தியாகேஸ்வரி(கனடா), பற்குணசிங்கம்(கனடா), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), நிலாமதி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஹரிசாந், ஹனுஜன், ஹனுஷ்கா, ஹனிஷா, மீனுஷா, லக்சிகா, சானுஷா, அஸ்னிகா, ஆறூாஸ், தசரதன், தசுக்கா, அக்ஷிகா, அபிசாந், சிறிஜா, சிறிஜினினி, சிவிகா, தக்சிகா, நவீசன், விதுஷா, அனுஷா, அபிசனா, அபிநிசா, ஆர்த்விக் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

*பார்வைக்கு :*
Wednesday, 14 Jul 2021 10:30 AM - 11:30 AM
Saturday, 17 Jul 2021 3:30 PM - 4:30 PM
Sunday, 18 Jul 2021 3:30 PM - 4:30 PM
Tuesday, 20 Jul 2021 3:30 PM - 4:30 PM
Cimetière Intercommunal des Joncherolles 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

*கிரியை :*
Wednesday, 21 Jul 2021 11:00 AM - 1:00 PM
Cimetière Intercommunal des Joncherolles 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**றமேஸ் - மகன்**
Mobile : +33783451518

தகவல்
**குடும்பத்தினர்.**

# பிரேரணையை எதிர்கொள்ள தயாராகவேண்டும் கம்மன்பில

## மரிக்கார் எம்.பி. வலியுறுத்து

*கொழும்பு, ஜூலை 14*

“எரிபொருள் விலை சூத்திரம் தொடர்பில் கதைக்காது நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்வதற்கு அமைச்சர் உதய கம்மன்பில தயாராக வேண்டும்.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“விலை சூத்திரம் அமுலில் இருந்திருக்குமாயின் எரிபொருள் விலை மேலும் அதிகரித்திருக்கும் என்று அமைச்சர் உதய கம்மன்பில கூறியுள்ளார். அவர் இதனை சாரம் அணிந்துக்கொண்டுதான் கூறினாரா எனக் கேட்கின்றேன்.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் உலகச் சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 19 டொலராகக் குறைந்தபோது, எரிபொருள் விலை குறைந்திருக்க வேண்டும். 50 ரூபாவுக்குக் குறைந்திருக்க வேண்டும். எரிபொருள் விலையைக் குறைத்தார்களா?

அதேபோன்று கடந்த வருடம் ஒரு பீப்பாய் எண்ணெயின் சாதாரண விலை டொலர் 45.5 ஆகக் காணப்பட்டது. இதன்போதேனும் எரிபொருள் விலையைக் குறைத்தார்களா? எரிபொருள் விலையைக் குறைக்காது டொலர் 64ஆக உயர்வடைந்தபோது எரிபொருள் விலையை அதிகரித்துள்ளனர்.

வருட இறுதியில் உலக சந்தையில் ஒரு பீப்பாய் எண்ணெயின் விலை டொலர் 100ஆக அதிகரிக்கப்போவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஏனெனில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையுடன் உலக நாடுகள் திறக்கப்படும்போது, விமான நிலையங்கள் திறக்கப்படும்போது, உலக மக்களின் வாழ்வாதார நிலைமை சாதாரண நிலையை அடையும்போது, நுகர்வு அதிகரிக்கும்போது எரிபொருள் விலை அதிகரிகப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

எனவே, மேலும் 154 ரூபாவால் எரிபொருள் விலையை அதிகரிக்கப் போகின்றீர்களா எனக் கேட்க விளைகின்றேன்.

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்தபோது குறைக்காது எரிபொருள் விலை அதிகரித்தப் பின் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதற்காக எதிர்பார்த்துள்ளனர்.

எரிபொருள் விலை குறையும்போது குறைப்பதற்கும் கூடும்போது கூட்டுவதற்குமே எரிபொருள் விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்தினோம்.

விலை சூத்திரம் அமுலில் இருந்திருக்குமாயின் குறைந்த விலைக்கு எரிபொருள்களை விநியோகித்திருக்கலாம். எனவே, எரிபொருள் விலை சூத்திரம் தொடர்பில் கதைக்காது நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்வதற்கு உதய கம்மன்பில தயாராக வேண்டும்” - என்றார். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு



7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-தர்மபிரபு,கீரோ
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-
சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-10
திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**

7.00 மணி : பாரதீ
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்-தி.வரதராஜன்
பிரதி செயலாளர்-இலங்கை
உதைப்பந்தாட்ட சம்மேளனம்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி TV CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் சக்தி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்